

# குறிஞ்சித்தளிர்

மலையக தமிழ் பட்டதாரி
மாணவர்கள் ஒன்றியம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*A/L*

*Accounting, Business Studies*

*Specialist*

# I.P.SATHARUPAN

B.Sc( B.Ad) Hons, Dip.In.Edu

# E.P.I

Kandy

Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சித்தளிர்

# ஒன்றுகூடல்
# 2004

**திகதி : 07-03-2004**

**இடம் : கொழும்புப் பல்கலைக்கழகம்**

வெளியீடு

**மலையக தமிழ் பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம்,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible]

2004

[illegible]

[illegible]

[illegible]

## பிரதம அதிதியின் ஆசிச்செய்தி.................

மலையகத் தமிழ் பட்டதாரி மாணவாகள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இவ்விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற இக் "குறிஞ்சித்தளிர்" எனும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இம்மன்றம் மேலும் தமது செயற்பாடுகளில் தலைத்தோங்க அதன் செயற்பாடுகள் வினைத்திறனுள்ளவகையில் அமுல்படுத்தப்படவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். இம்மாணவர்களின் முயற்சிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதோடு நில்லாது எதிர்காலத்தில் உங்களுடைய முயற்சிக ளுக்கு கைகொடுத்துதவுவதை அறியத்தருவதில் பெருமையடைகிறேன்.

P.இராதாகிருஷ்ணன்,
முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்.
07-03-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Our Best Wishes**

# மலையகத்தின் மங்காப்புகழ்



பொருளியல் விரிவுரையாளர்:

**S. விக்கி B.A**

**(Special (Econ)**

# E.P.I. கல்வி நிறுவனம்,

**கண்டி**

E-Mail : vickyks 2000@yahoo.co.uk
vicky06@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை.............

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பயிலும் மலையக மாவட்டங்களைச் சேர்ந்த இந்திய வம்சாவழி மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள மலையக தமிழ் பட்டதாரி மாணவர்கள் மன்றமானது சீரும் சிறப்பும் பெற்றுத் தமது சமூக மேம்பாட்டுக்குறிக்கோள்களில் சிறந்த வெற்றிகளைப்பெற உளமார வாழ்த்துகிறேன்.

பல்கலைக்கழக அமைப்பின் இறுக்கமான அனுமதிக் கொள்கைகள் இயல்பாக ஏற்படுத்தக்கூடிய தடைகளையும், சவால்களையும் வெற்றிகரமாக சந்தித்து அனுமதி கட்டுப்பாடுகள் நிறைந்த பல்கலைக்கழக அமைப்புக்குள் மலையக மாவட்டத் தமிழ் மாணவர்கள் ஒரு சிலராவது அனுமதி பெற்றிருப்பது ஒரு பாராட்டத்தக்க விடயம், இவ்வகையில் முழு முயற்சியுடன் படித்து கடும் போட்டிகளுக்குள் அனுமதி பெற்றுள்ள மலையக தமிழ் மாணவர்களாகிய நீங்கள் முழு மலையக இந்திய வம்சாவழி சமூகத்தவர்களாலும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு அனுமதி பெற்றவர்கள் தாம் தமது படிப்பு என்ற வரையறைக்குள் நின்று செயற்பட முற்படாது தாம் பிறந்து வந்த சமூகம் பற்றிய நினைவுகளை கைவிடாது அச்சமூக மேம்பாடு என்ற உயர்ந்த மனித நேயச்சிந்தனையுடன் தம்மை ஓர் அமைப்பாக ஏற்படுத்தி மலையக சமூகத்தின் மேம்பாடு நோக்கி சிந்தித்து செயலாற்ற முன்வந்திருப்பது உவகை தரும் ஒரு விடயமாகும். அவர்கள் அனைவருடைய சமூக உணர்வும் பொருப்புணர்வும் பாராட்டுக்குரியது.

கல்வியில், பொருளாதாரத்தில், வீட்டுவசதிகளில், சுகாதாரத்தில் என்றில்லாது அரசியல் ஜனநாயக உரிமைகளிலும் காலங்காலமாகப் பின்தங்கி வந்த எமது மக்களின் மேம்பாட்டுக்கு அரசியல், தொழிற்சங்க தலைமைத்துவம் மட்டும் போதாது என்ற உணர்வுடன் நீங்கள் உருவாக்கியுள்ள இளைஞர் தலைமைத்துவம் மலையக மக்களின் வாழ்க்கை மேம்பாட்டில் குறிப்பாக கல்விமேம்பாட்டில் செய்யத்தக்கன ஏராளம் உள.

இந்த உணர்வுடன் செயற்பட முன்வந்துள்ள உங்களுக்கு என்றும் எமது ஆதரவும் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் உண்டு. உங்கள் முயற்சிகளிலும் செயற்பாடுகளிலும் நீங்கள் பெரு வெற்றிபெற வேண்டும் - பெறுவீர்கள் என்பதே எமது நம்பிக்கையும் அவாவும்.

நன்றி

S. சந்திரசேகரன்
பேராசிரியர்- கல்விபீடம்
கொழும்புப் பல்கலைகழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

# Vijaya JEWELLERS



**No.104, Main Street,**
**Maskeliya-22010**
**Sri Lanka**

TP: 94-52-77205

FAX: 94-52-77487

E-mail : vjsiva@slt.lk

---

**WITH BEST COMPLIMENTS FROM:**

# THENESH TEX

Dealers in:-

**T.V, Steel Furnitures Audio**
**Recording Undertaken Photo Copy & Laminating,**
**& Communication**



**TP: 052-2277440, 052-2277441**
**177, Main Street,**
**Maskeliya**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியும் பாராட்டுதலும்............

பொறுப்புணர்வுடன் சமுதாய நலன் கருதி மலையக கல்வி மேம்பாடு மற்றும் சமூகநல செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டுவரும் இம்மாணவர்களது முயற்சிகளை கண்டு அதே சமூகத்தைச் சார்ந்த ஒரு விரிவுரையாளர் என்ற வகையில் நான் பெருமைப்படுகின்றேன்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எனது பதினொரு வருட அனுபவத்தில் (மாணவியாக,விரிவுரையாளராக) ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சீராக நடவடிக்கைகளை தொடர்ந்தும் கொண்டு செல்லும் ஓர் அமைப்பாக இவ் அமைப்பினை நான் நோக்குகின்றேன். இதே நோக்கங்களுக்காக இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட அமைப்புக்களோ சங்கங்களோ தமது நடவடிக்கைகளை ஒரு சீரான முறையில் கொண்டு செல்லவோ, ஒத்துழைப்புடன் தொடர்ந்து செயற்படவோ தவறிவிட்டன. இதற்கு போதியளவு அங்கத்துவ பலம் இல்லாதிருந்தமையும், சரியான, போதியளவு வழிகாட்டுதல்கள் இல்லாதிருந்தமையுமே முக்கிய காரணங்களாக அமைந்தன என்பது எனது கருத்தாகும்.

ஓர் அமைப்பு என்று வரும்போது அதற்கும் கருத்துபேதங்கள், மாறுபட்ட மனநோக்குகள் ஏற்படுவது இயல்பு. அதனது சகல அங்கத்தவர்களும் எமது சமுதாயத்திற்கான எமது முயற்சி என்ன மனோபாவத்துடன் "நாம்" என்ற எண்ணப்பாங்குடன் செயற்படின் அதுவே நடவடிக்கைகளின் வெற்றிக்கு பலமாக அமையும். இவ் அமைப்பினது அங்கத்தவர்கள் அவ்வாறான ஒத்துழைப்பு தன்மையுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள், இனி வரும் காலங்களிலும் அவ்வாறே செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையினை விரிவுரையாளர்களாகிய நாம் கொண்டிருக்கின்றோம்.

பல்வேறுபட்ட வழிகளில் தம்மாலான முழு ஒத்துழைப்பினையும் இம்மாணவர்கள் அமைப்பு தொடர்பில் வழங்கிவருவதனை நான் காண்கிறேன். அந்தவகையில் மலையக மேம்பாடு கருதி இவ்வமைப்பினை உருவாக்குவதில் முன்நின்ற தாபகர் திரு.சசிதரன், முன்னால் தலைவர், செயலாளர், உட்பட அனைத்து அங்கத்தவர்களுக்கும் தற்போது இதனது செயற்பாடுகளை சிறப்பாக கொண்டு செல்லும் தலைவர், செயலாளர் உட்பட அனைத்து அங்கத்துவ மாணவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனதறிவிற்கெட்டிய வகையில் கொழும்புப் பல்கலைகழகத்தின் ஒரு மலையக மாணவர் அமைப்பினால் முதன்முதலாக வெளியிடப்படும் இதழாக இதனை நான் நம்புகிறேன். அந்த வகையில் இம்மாணவர்களது முயற்சியினையும், ஆக்க சிந்தனையையும், ஆர்வத்தினையும் பாராட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். தொடர்ந்தும் இதனது செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு தமது கல்வி நடவடிக்கைகளை பாதிக்காத வகையில் முன்னெடுத்துச்செல்வதோடு, இனிவரும் காலங்களில் தமது சோதர, சோதரிகளுக்கும் வழிக்காட்டுதல்களை காட்டிச்செல்வார்கள் என்ற நம்பிக்கையுடன் எனது ஆசிகளை இவ் இதழினூடாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. உஷா ஸ்ரீதரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
முகாமைத்துவ கற்கைகள் பிரிவு,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Visit to ....

*KANDIYAN TRADING CORPORATION*

With Best Compliments ...

From : -

*Kandiyan Trading Coporation*

No. 93 , D.S.Senanayake Veediya,

Kandy.

Tel : 081-2222616

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

மலையக மக்களின் மேம்பாட்டிற்காகவும் அதிலும் விசேடமாக சிறுவர்களுக் கான செழிப்பான வாழ்வைக் கட்டியெழுப்ப "மலையகத் தமிழ் பட்டதாரி மாணவ ஒன்றியம் எடுக்கும் முயற்சி பெருமைக்குரியதும் பாராட்டுக்குரியதுமொன்றாகும்.

வாழ்வில் வளம்பெற வாய்ப்பு பெற்றவர்கள், தம் தரத்திலும், தாழ்நிலை யிலுள்ளவர்களை தரமுயர்த்துவதற்காக சிந்தித்துச் செயல்படுவதே அந்தச் சமூகத்தின் விடியலுக்கான அறிகுறியாகும். அந்நிலையில் பல்கலைகழக கல்வியால் தம்மை இணைத்துக்கொள்ள வாய்ப்பு பெற்ற வாலிபர்கள், ஒன்றுகூடி மலையகத்தின் மழலைகளின் மகிமைக்காகவும், தொழிலாளர் களின் துயரத்தைத் துடைக்கவும், மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொணரவும், கலையாற்றலுக்கு மெருகூட்டவும் எடுக்கும் இம்முயற்சி பொறுப்புமிக்க, ஒப்படைப்பு மிக்க செயலாகும்.

மனித நேயங்கள் மலரவும், மனித உரிமைகள் பேணவும், மனித நலன்கள் செழிக்கவும் நாமனைவருமே செயல்பட உறுதிகொண்டுள்ள, நல்ல தருணமாக இதனை அனைவரும் அணுக வேண்டும்.

இம்முயற்சி அனைத்து மக்களுக்கும் பயன் தரும் ஒரு வழிமுறையாக ஒருமைப்பாடு, ஒற்றுமை என்ற அடித்தளத்தில் அமையவும், மனித நேயத்தோடு சாதி, மத, கலாசார, மொழி போன்ற தடைகளைத் தாண்டி அனைவரினதும் விடியலுக்கு வழிவகுக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இம் அரும் பெரும் முயற்சியில் இணைந்து கொள்ளும் அனைவருக்கும் இறைவனின் அருளும், ஆசியும் உரித்தாகுக.

வண. எபனேசர் ஜோசப்,
செயலாளர் நாயகம்,
தேசிய கிறிஸ்தவ மன்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM:



# ACHINIKA
## HOLIDAY INN

*Comfortable Rooms, Eastern & Western Cuisine*
*Wedding Parties Hall Facilities*



TP: 052-2277131
HOT: 0777-517247

405, UPCOT ROAD,
MASKELIYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

தான் கொண்ட சமூகத்தை முன்னேற்றுவதற்கு உதயம் பெற்ற மலையகத் தமிழ் பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம் தான் கொண்ட பணியை சிரமேற்கொண்டு அதன் பணி இடையறாது நடைபெற வேண்டும். சுயநலம் கொண்ட இன்றைய பொழுதில் பொது நலம் கொண்டு இயங்கும் இவ்வமைப்பு உண்மையில் வரவேற்கத்தக்க தொன்றாகும்.

இவர்கள் உருவாக்கி செயற்படும் இவ்வமைப்பு, மென்மேலும் வளர்ச்சி கண்டு வியாபித்து நிழல் தரும் மரமாய், ஒளிகொடுக்கும் சூரியனாய், சேய்க்கு தாயாய், பசிக்கு உணவாய் அதன் பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

பிரம்ம ஸ்ரீ கைலாச நாத குருக்கள்,
ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்,
இறத்தோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Best Wishes

முதல் முறையாக வெளியிட தீர்மானித்துள்ள இவ் குறிஞ்சித்தளிர் இதழ் சிறப்பாக மலர எமது இனிய வாழ்த்துக்கள்

அசல் 22 கெரட் தங்க நகைகளை
பெற ஊவாவில் நாட வேண்டிய
ஒரே ஒரு முதல்தர தங்க மாளிகை



Astraluxumie
Jewell House

Tel:055-2288035

289,Main Street,
Passara.



குறைந்த வட்டியில் அடகு சேவை பெற
ஊவாவில் நாட வேண்டிய முதல் தர நிறுவனம்

**Sri Lakshmi Banker's**

279 B, Main Street,
Passara.
Tel: 055-2288221




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் சிந்தனையிலிருந்து சில துளிகள்...........

"ஏழை மாந்தருக்கு எழுத்தறிவித்தல் உலக அறங்களில் தலையாய அறமாகும்" என்ற வாக்கிற்கு அமைவாக மலையக பிரதேசங்களில் வாழும் பலராலும் தாழ்த்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட ஏழை, எளிய மக்களின் கல்வி சமூக மேப்பாட்டினை நோக்கமாகக்கொண்டு விதைக்கப்பட்டது நம் ஒன்றியம்.

மலையக மாந்தர் யாவருக்கும் பலன்கொடுக்கும் விருட்சமாக நம் ஒன்றியம் வளர அதன் மூலம் குறுகிய காலத்தினுள் முதன்முதலாக பெற்றெடுத்த "குறிஞ்சித்தளிர்" என்ற கன்னி மலரை உங்கள் கரங்களில் காணிக்கையாக ஒப்படைக்கின்றோம். பல இடர்பாடுகளின் மத்தியிலும் தமது அயராத முயற்சியின் பயனால் பல்கலைக்கழக அனுமதி பெற்று கொழும்பு பல்கலைக்கழகம் நுழைந்த எம் மலையக மாணவர்களின் உள்ளங்களை, எண்ணங்களை வண்ணங்களாக மாற்றி தருகின்றது இம்மலர். அத்தோடு நின்றுவிடாது மலையகப்பிரதேசங்களில் பரவிக்காணப்படும் பாடசாலை மாணவர்களின் சிறந்த பல ஆக்கங்களும் இவ்விருட்சத்திற்கு உரமாக அமைவதையிட்டு நாம் பெறுமிதம் கொள்கின்றோம்.

மலையகம் செழித்திட வேண்டும், நாம் பெற்ற செல்வம் நம் மண்ணின் மாந்தர் பெற்றிடவேண்டும். எம் சமூகம் விழித்திட வேண்டும் என்ற உள்ளத்தோடு எமக்கு இவ்வாடா மலரான குறிஞ்சிதளிரை வழங்க உதவிகரம் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மலையகப் பகுதிகளில் நிலவும் பல்கலைக்கழக அனுமதிக்கான மந்தப்போக்கினை குறைப்பதற்கான ஒரு வழிமுறையாக எமது ஒன்றியம் கடந்த காலங்களில் மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் பாடசாலை மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்குகளை நடாத்திவந்துள்ளது. எதிர்க்காலத்திலும் மலையக வரலாற்றின் ஒரு திருப்புமுனையாக எம் ஒன்றியம் அமையப்போகின்றது என்பதில் ஐயமில்லை. எம்பணி தொடர்ந்திட உங்கள் கரம் எம்மை காத்திட வேண்டும்.

"மலையகமே விழித்திரு உன் விடிவு சமீபித்திருக்கிறது"

"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"

நன்றி
J.P.வெஸ்லி,
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Well wisher*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரிடமிருந்து................

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே-அதில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே"

என்ற பாரதியாரின் சிந்தனைக்கு இணங்க மலையக தமிழ் இளைஞர்கள் ஒன்றுப்பட்டு செயற்பட வேண்டும். இதனால் மலையகச்சமூகம் நல்லதொரு மாற்றத்தை காண வேண்டும் என்ற வகையில் எமது மலையக பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளது. இத்தகைய செயற்பாடுகளின் ஓர் கட்டமாக இக் "குறிஞ்சித்தளிர்" எனும் மலர் பல எதிர்ப்பார்ப்புக்களையும், கனவுகளையும் ஏந்தி வெளியாகியுள்ளது.

மலையக பட்டதாரி மாணவர் என்ற வகையில் இதுவரை நாம் பல செயற்பாடுகளை செய்து வெற்றி கண்டுள்ளோம் அனேகமாக இவை கல்வி சார்பானதாகவே அமையப்பெற்றன. காரணம் ஓர் சமூகம் தலைத்தோங்க வேண்டுமானால் அதற்கு சிறந்த அடிப்படை அவசியம், அத்தகைய அடிப்படையைத் தருவது கல்வியேயன்றி வேறொன்றுமில்லை. எனவே இந்நூலைப்பொருத்த வரையிலும் மலையக பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் எமது மன்றத்தின் சார்பாக நடாத்தப்பெற்ற போட்டிகளின் சிறந்த தெரிவுகளையும் உள்ளடக்கியுள்ளோம் இது அவர்களை ஊக்கப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

மலையக மாவட்டங்களை சேர்ந்த பட்டதாரி மாணவர்களாகிய நாம் சமூக சிந்தனையுடன் மேற்கொண்டுவரும் இச்செயற்பாடுகள் சிறந்த பெறுபேற்றைப் பெறவேண்டும், இதனால் எம்மைப்போல் பல பட்டதாரி மாணவர்கள் மலையகத்திலிருந்து உருப்பெற வேண்டும். மலையக சமூகத்தின் சிந்தனைகள் உயர்வடைய வேண்டும், அது செயலில் பிரதிபலிக்க வேண்டும் என்பவைப்போன்ற எமது கனவுகள் நிச்சயம் நனவாகும் என நம்புகிறேன். இம்மலர் இத்தோடு மட்டும் மணம் வீசி நின்றுவிடாது தொடர்ந்தும் இம்மன்றத்தின் செயற்பாடுகள் வாயிலாக மலர்ந்து மணம் பரப்பும் என்பதில் ஐயமில்லை.

நன்றி

V. ரனேஷ்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேசாஹினி மலர் விற்பனை நிலையம்

உரிமையாளர் : க.கனகரத்தினம்

சுவாமி அலங்காரம், பூ மணவறை, முத்து மணவறை, திருமண மாலைகள், சடை நாகம் பூச்செண்டு, தலைப்பாகை, ஒட்டியான செட், திருமண மண்டபம், கார் அலங்காரம், மற்றும் அனைத்து சுப வைபவங்களுக்கும் தேவையான சரம், மாலைகள், நவீன டிசைன்களில் செய்து தரப்படும். செவ்வந்திப்பூ மற்றும் அனைத்துப்பூக்களும் விற்பனைக்கு உண்டு. பெண்மணிகளுக்கு தேவையான கோல்ட் கவரிங் நகைகள் அலங்காரம் பொருட்கள், பரிசுப்பொருட்கள், பிளாஸ்டிக் பூக்கள் போவிலுக்கு தேவையான அபிஷேகப்பொருட்கள் என்பவை விற்பனைக்கு உண்டு.

533 K, பிரதான வீதி
மாத்தளை
Tel: 071-4877060
0777-946925

66/1 A, மாத்தளை வதி,
பிள்ளையார் கோவில்,
றத்தோட்டை.
Tel: 066-2255475


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரிடமிருந்து.............

மலையக பட்டதாரி மாணவர்கள் அமைப்பின் கன்னிமுயற்ச்சியான "குறிஞ்சித்தளிர்" எனும் மலரை வெளியிடுவதில் இதழாசிரியர் என்ற வகையில் பெருமையடைகிறேன். மலையகம் வாழ் தமிழ் சமூகத்திற்கு பட்டதாரி மாணவர்கள் என்றவகையில் எம்மாலான பணிகளை ஆற்றவேண்டும், மலையக தமிழர் ஒருமித்து செயற்பட வழிவகுக்கவேண்டும் போன்ற நோக்கங்களை முன்னெடுக்கும் வகையிலான முயற்சியான இம்முயற்சியின் அறிமுகக்கட்டமாக வெளியிடப்படும் இந்நூால் எம்மன்றத்துக்கு எல்லோரிடத்திலும் ஓர் விசேட அறிமுகத்தைத்தரும் என நம்பகின்றேன்.

பல கட்டுரைகளையும், கவிதைகளையும், சிறப்பாக்கங்களையும், அனுசர ணையான விளம்பரங்களையும் உள்ளடக்கியுள்ள இந்நூல் மலையக பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும்முகமாக அவர்களின் ஆக்கங்க ளையும் உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலரினை அலங்கரிக்க தமது பங்களிப்பினை தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இந்நூலை சிறப்புற வெளியிட தமது விளபரங்களைத் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் எமது மனமாந்த நன்றிகள். மேலும் இந்நூல் சிறப்பாக அமைவதற்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆக்கங்களுக்கு அவற்றை ஆக்கியவர்களே பொறுப்பேற்கின்றனர். தொகுத்து தரும்பணி எம்பணி தொகுப்பில் சொற்பிழை, பொருட்பிழை, எப்பிழை இருப்பினும் பொறுத்தருள வேண்டும்.

நன்றி

க.சத்தியதர்ஷினி
இதழாசிரியர்
சட்டபீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர், ஆசிரியர்களின் ஆசிச்செய்தி

**"மனிதனது ஆற்றல்கள், திறமைகள், நாட்டங்கள் என்பன தாயின் கருவறையிலேயே உருவாகின்றன"**

இத்தகைய மூலதனங்களின் அடிப்படையில் மாணவர்களின் முயற்சி எனும் செயல்மூலம் ஆசிரியர்கள், தம் மாணவர்களின் அறியாமையை அகற்றி அவர்களைப் பூரண மனிதர்களாக்கும் இடமே கல்விக்கூடமாகும்.

இவ்வகையில் இச்செயல்கள் அனைத்தையும் சிறப்புடன் நடாத்தி தலை நிமிர்ந்து நின்று தனக்கென ஒரு தனியிடத்தை பெற்றுத்திகழ்வது இந்த "மலையகப்பட்டதாரிகள் ஒன்றியம்" என்பதில் ஐயமில்லை.

இவர்களது கற்றல் கற்பித்தல் தொடர்பான இலவச சேவைகள், சமூக விழிப்புணர்வு தொடர்பான மன்றங்கள், சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள், தலைமைத்துவ பயிற்சிமுகாம் போன்ற இன்னோரன்ன சேவைகள் மலையக மாணவர்கள் பலரை முன்னேற வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களது இந்த நற்பணி நல்ல முறையில் தொடர்ந்து நடைபெறவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

அதிபர், ஆசிரியர் குழாம்.
மா/ இறத்தோட்டை இந்து மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With best compliments from:**

# JASPER


International & Local
Books & Stationer's
(Office Supplier's Computer Accessories
All Kinds of Printing &
Book Binding & Ruber Stamps.

No.A2, Super Market,
Kollupitiya,
Colombo-3.
Tex/Fax : 4723167,
Mobile : 0722-919801,
0777-902712.

**With best compliments from:**

## HATTON PRINTERS
## &
## SARASWATHY STUDIO (PVT) LTD.

Printers, Stationers, Photographers



Nos. 10 & 11, Dickoya Road,
Hatton.

Tel: 051-2222356, 051-2222284

**With best wishes all**



## T.MAHALUXCHUMY

South Eastern University of Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Our Best Wishes

# TORRENT

PURE NATURAL

# WATER

"TORRENT cares for nations health the essence of life"



**D.C.P. De Silva & Company**

148, Bellanwila Road,

Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக தமிழ் பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம்
## கொழும்பு பல்கலைக்கழகம்

கடந்துபோன காலத்துள் நாம் எங்கிருந்தோம் என்பதனை மீட்டுப்பார்க்கின்ற பொழுதுகளில் நடந்துவந்த பாதைதான் நம் வரலாறு. என்பதனை மறுத்திடமுடியாது போகின்றது. இருபதாம் நூற்றாண்டு உலகத்தினை எவ்வளவோ நவீனமயப்படுத்திவிட்டுப்போக 21ம் நூற்றாண்டோ இன்னும் எதையோ தேடிக்கொன்டு நகர்ந்துகொண்டிருக்க நாம் மட்டும் இருந்தவற்றையும் தொலைத்துவிட்டு தேடுவதற்கு தானும் திறாணியற்றவர்களாக நிற்கின்றோம். என்ற மனநிலையைத்தானும் உணரத்தயாராக இல்லாத ஒரு சமூகத்திலுருந்து கள்ளர்களிடம் அகப்படாமல் முகத்திற்கு முகம் கொடுத்து வெளியே வருகின்றோம் என்பதனை அறிந்திடமுயன்ற வேலையில் தான் நாம் நமது இனம் அதன் தனித்துவம் வளர்ச்சி. எங்கே. யாரால். எப்போது. என்ன நடத்தப்பட்டுக்கொன்டிருக்கின்றது என்ற மனவிசாரிப்புக்களின் பின்னர் தான் ஓர்நோக்கம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஒருவரின் சிந்தனைக்குள் தோன்றி மற்ற உறுப்பிணர்களிடத்தும் கடத்தப்பட்டபோது அமைப்பாக செயற்பட வேண்டும் என்ற எண்ணம் வெகுகாலத்தின் பின்பே தோற்றம் பெற்றிருந்தது

அந்தவகையில் எடுத்துநோக்குகின்ற போது எந்தவோரு சமூகத்தின் தனித்துவமும். மேம்பாடும் ஒரே நாளில் திடீரென தோன்றப்போவதில்லை அதேபோல் வளர்ச்சி அடையாமல் இருந்திடப்போவதுமில்லை என்பது உறுதி என்பதாக நம்பினாலும் நமது பங்கு என்ன என்பதை உணர்ந்துகொண்ட வேலையில்தான் இலங்கையில்வாலும் இந்திய வம்சாவழியினர் என்பதை பறைசாற்றி நிற்கின்ற கொழும்பு பல்கலைக்கழக தமிழ்பட்டதாரி மாணவர்கள் இத்தகையதொரு அமைப்பினை தம்முள் நிறுவ வேண்டுமென தீர்மானித்திருந்தனர்.

இலங்கையின் உயர்கல்வியில் மிக நீண்ட வரலாற்றைக்கொண்ட ஓர் நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகம் என்பதை யாரும் மறுக்கமுடியாது இருந்தாலும் இந்நிறுவனத்தின் வெளியீடுகள் இலங்கையின் சகல பாகங்களிலும் தமது பங்கினை சமூகத்திற்கு வழங்கிவந்திருப்பதை இல்லாததாக்கி விட முடியாது என்பதை மமதையுடன் கூறிக்கொள்கின்ற போது மலையகத்திலுருந்து வந்தவர்கள் மலையகத்திற்கு எதை செய்து அதன்வளர்ச்சியை துரிதப்படுத்தினார்கள் என்பது கேள்விக் குறியாகின்றது.

1993ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் ஒரு திணைக்களமாக இயங்கிவந்த வர்த்தகத்துறையில் தமது பட்டபடிப்பை மேற்கொண்டிருந்த மலையக தமிழ் மாணவர்கள் சிலரின் முயற்சியால் கொழும்பு பட்டதாரி மாணவர் சங்கம் என்ற ஓர் அமைப்பு ஒன்று முறைசாரா வகையில் கூடிஅமைப்பிற்கான நிர்வாக உறுப்பினர்களை தெரிவுசெய்தது. ஆயினும் ஏதேதோ தடங்கல்களால் தொடர்ந்து செயற்படுவதற்கு முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது.

அதன் பின்னரான காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முறைசாரா அமைப்பாக செயற்பட்டு வருகின்ற மலையக தமிழ் பட்டதாரி மாணவர் ஒன்றியத்தின் பேரில் பேராதனை வளாகத்தில் நடைபெறுகின்ற ஒன்றுகூடல் நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றதோர் நிகழ்வு வருடந்தோறும் நிகழ்ந்து வருகின்றது. 2000ம் வருடம் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுகின்ற நிலைக்கு ஓர்முற்றுப்புள்ளியாகிப்போயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் செயற்பட்டுவந்த இடைத்தொடர்பாளர்களின் பங்கு குன்றி வர ஓர் மந்த நிலையை உணர்த்தியிருந்தது இவ்வாறே இரண்டு வருடங்கள் உருண்டோடி விட அவ்வப்போது சுற்றுப்பிரயாணங்களை மாத்திரமே மேற்கொன்டுவந்த கொழும்பு பல்கலைக்கழக தமிழ் பட்டதாரி மாணவர்கள் தமது இயலுமை வீணாக்கப்படுகின்றதை உணரத்தொடங்கினார். 1993ம் ஆண்டிற்கு பிறகு 2002ம் ஆண்டில் தாமும் ஓர்தனியான அமைப்பாக இயங்கிவிட வேண்டும் என்ற உந்துதலினால் வெறுமனே ஒன்றுகூடலும் சுற்றுப்பிரயாணமும் மட்டுமல்ல நமது பணி என்பதை நடைமுறைப்படுத்தி முறைசாரா அமைப்பாக இயங்கினாலும் முறையான நிர்வாகக்குழுவின் அவசியத்தை உணர்ந்து 25-09-2002 அன்று இவ்வமைப்பை உருவாக்கிக்கொண்டது. மலையக தமிழ் பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம் (U.T.U.F) தனக்கான ஒரு தூரநோக்கையும் செயற்பாட்டுநோக்கத்தையும் உருவாக்கிக்கொண்டு மலையகத்தில் தமது நோக்கத்தினை செயற்படுத்திட தொடங்கி கடந்த கல்வியாண்டில் (2002-2003) இரண்டு இலவச கருத்தரங்குகளை முறையே O/L, A/L இறத்தோட்டை இந்து மகாவித்தியாலயத்திலும், யட்டியந்தோட்டை புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயத்திலும் நடாத்தியது. அத்துடன் உயர்க்கல்வி விழிப்புணர்வு நிகழ்வுகளையும் இப்பாடசாலைகளில் மேற்கொண்டது.

## எமது எதிர்க்கால திட்டங்கள்

- மலையக சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- மலையக கல்வி, சமூக அபிவிருத்திதிட்டங்களை முன்னெடுத்தல்
- தலைமைத்துவ பயிற்சிகளை மலையகந்தோறும் நடாத்துதல்
- இலவச கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடாத்துதல்.
- க.பொ.த(சா/த,உ/த)பல்கலைக்கழக வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் களை ஏற்படுத்தல்.
- வலது குறைந்தோருக்கான உதவிகளை மேற்கொள்ளல்.
- மாணவர்களிடையே கணணி அறிவினை வளர்த்தல்
- சுயதொழில் வாய்ப்புத் திட்டங்களை அமுல்படுத்தல்

U.T.U.F

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our Best Wishes*

# ATCA

ELECTRICALS (PVT) LTD.

IMPORTERS WHOLE SALE , RETAIL & SUPPLIERS IN
ELECTRICAL ALL GOODS.

NO 121/B, 1st Cross Street,
Colombo 11.

T.P 011 2332640
011 2440935
Fax :011 2440935

**With best compliments from:**

# GOWRI TRADING CO.,

Dealers In Aluminium Brass, Copper Metal
General Scrap


No 242,246 Mahavidyalaya Mawatha,
Colombo 13
Tel : 011 2342207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes

NSJ

# NEW SRI JAYALUCHMI HOTEL



Tel : 0112436306
: 011 2343769

No 70, Front Street,
Colombo 11

# INDRA SHOE PALACE

No. 78 , Main Street ,
Rottata.
Tel : 066 2255244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Best Wishes

# Sri Krishna

Jewellers & Pawing Centre

**No.08, Main Street,**
**Rattota.**



Branch

## Sri Krishna


Tex & Tailors



No.06, Main Street,
Rattota.
Tel: 066-2255315

THAT KEEP YOUR SMARTLY IN STYLE
HIGH QUALITY FASHION

## Best wishes



LEADING NAME IN QUALITY TAILORING

Rt

# RAJAH

Shirting & Suiting
TAILORING MART

Textiles & Pawing centre

No.36 A, Jayarathne Mawatha
Rattota.
Tel: 066-255396

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# KATPAHAM

*Dealers in Jaffna Products*
*Handicrafts, string Hopper molds,*
*Gift Items & Groceries.*

Tel :011 25914111, 072-2902073
E-Mail : katpaham244@hotmail.com

**No : 244, Galle Road,**
**Colombo 04**

---

With best compliments from:

VSPL

# VISAKA SUPPLIERS (PVT) LTD.

Importers & General Hardware Merchants

No 430-C , Old moor Street
Colombo 12
Tel : 011 2437310 , 011 2423316

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கம்

நான் என்ற ஆணவம் அடக்கி
நாம் என்ற ஒரு குடையின் கீழ்
நாளைய தேதியில் நல்லது செய்ய
நாட்டிற்கு நன்மை உண்டாக
நான்கைந்து பேர் கூடியது

எனக்காக வன்றி எம்மவருக்காக
எதிலும் சிரத்தைக்கொண்டு
எளிதாய்ப் பல தொண்டுகள்
எப்போதும் செய்திட
எழுந்த நான்கெழுத்துக்கூட்டு

பகைவர் மறந்து
பலதும் யோசித்து
பத்துப்பேர் சேர்ந்து
பண்புடன் சேவை
பாருக்குச்செய்வது

மெழுகாய் உறுகி
வெண்ணெயாய்த் திரண்டு
வாணமாய் விரிந்து
தென்றலாய் வீசி
கதிரவனாய் ஒளி கொடுப்பது

ஊர் கூடி தேர் இழுத்தால் வந்து சேரும்
ஒருமனதாய் நாம் இருந்தால் துன்பம் தீரும்
சிறு துளிகள் சேர்வதுதான் பெருவெள்ளமாகும்
நாலுபேர் கூடிவந்தால் சங்கமாகும்

தனிமரம் தோப்பாகாது
தனி கை தட்டினால் சத்தம் வராது
தனிமனிதன் சங்கமாகாது
தரணியில் தனித்துவத்துடன் பலரும் சேர்ந்து
தனித்துவத்துடன் சேவகம் செய்வது

பாமரன் படித்து உயர
பாட்டாளி பாட்டு பாட
பாரினில் நல்லது நடக்க
பாசிசம் எங்கும் பரவ
பாதையாய் வருவது.

V.பழனிகுமார்
முகாமைத்துவ நிதிப்பீடம்
விடுகை ஆண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரி தேடும் முகங்கள்

கறைப்படிந்த கரங்கள், வெடிப்புக்குள்ளான விரல்கள், முகங்களில் சுருக்கம், முதுகில் கூன் - இது முதுமையின் அடையாளமல்ல தேயிலை பறித்து, தேய்ந்த நிலவாகி, தேகத்தை கறுமையாக்கி தேயிலைக்கே உரமாகி போகும் ஒரு சமூகத்தின் அடையாளம். வளர்ச்சியடைந்த சமூகமொன்று திரும்பி பார்த்தால் அது தெரிகிற தூரத்தில் கூட எமது சமூகமில்லை. வல்லரசு நாடுகள் வானளவு உயர்ந்து நிற்க நாம் இன்னும் ஓர் வட்டத்திலேயே நிற்கிறோம். உலகத்தின் அசுர வேக வளர்ச்சிக்கு போட்டி போட வேண்டிய அவசியமில்லை அதை பின் தொடர கூடிய நிலை கூட இல்லாமல் இருப்பது இதன் அவலநிலையாகும். மலையூரானின் வேதனை விம்மல்களை செவிமடுக்க எந்த தேவர்களும் இன்னும் பிறக்கவில்லை.

உழைத்தால்தான் சோறு என்று கைக்குழந்தையை பிள்ளை மடுவத்தில் விட்டு விட்டு மலையில் மழையிலும் சலிக்காமல் விரல்கள் வீக்கமெடுக்க கொழுந்து பறிக்கும் தொழிலாளிக்கு ஏற்ற கூலி கிடைக்கிறதா? சுகதார வசதிகள் சுகமாய் இருப்பவர்களுக்கு உண்டு, ஆனால் சுமையுடன் வாழ்பவர்களுக்கு வழங்கப்படுகின்றதா? கல்வியினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினைக் கொடுத்தல் என்பது எவருக்கும் ஒரு சலுகையல்ல மாறாக அது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகும். எங்காவது கல்வி உரிமை மறுக்கப்படுமாயின், சாரம்சத்தில் மனித உரிமை அங்கு மீறப்படுகின்றது என்பதே உண்மை இவ்வுரிமை இங்கு மீறப்படவில்லையா? அல்லது 50 ஆண்டகளுக்கு முன் மலையக மக்களை அரசியல் அடிமைகளாக்கி வாக்குரிமையுடன் பிறப்புரிமையையும் நீக்கி 20ம் நூற்றாண்டில் சமூக ரீதியாக கொடுக்கப்பட்ட உரிமையை சட்டரீதியாக இல்லாமற்செய்த கொடுமை இழைக்கப்படவில்லையா? கட்டாய கருகலைப்பு செய்து மலையக சமூகத்தை வேரோடு அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையா? அத்தோடு விலைவாசியின் விசுவம் மலையக மக்களை குற்றுயிராக்கி இறுதி ஈனக்குரலை எழுப்பச் செய்துள்ளது. பாலில்லா குழந்தை, சோறில்லா பிள்ளை, கூழில்லாத உழைப்பாளி, சாவில்லா ஏழை இதுவே உண்மை பொருளாதாரத்தின் நிலைப்பாடு. இப்படி இந்த சமூதத்திற்கு இழைக்கப்பட்ட துரோகத்தையும், ஏமாற்றத்தையும், வஞ்சகத்தையும் சொல்லி கொண்டே போகலாம்.

ஒரு சமூகம் இப்படி காலத்திற்கு காலம் திட்டமிட்டே செய்யப்பட்ட கொடுமைகளுக்கான காரண காரியங்களை ஆராய்கின்ற போது பல சமூக பொருளாதார காரணங்கள் காணப்பட்டாலும், கல்வி அறிவில் இழைக்கப்பட்ட அநீதிகளே எமது சமூகத்தின் இன்றைய நிலைக்கு காரணமாகும். நவீன உலகிலே, இன்று சமூகங்களிடையே வேறுபாடுகள் பல காணப்படுகின்றன இதன் பயனாக எந்த ஒரு நாட்டினதும், மனித உரிமைப் பிரச்சினை, உள்நாட்டு பிரச்சனை என உதாசீனப்படுத்தப்படுவது அறிவீனமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தை உறுதிப்படுத்த 1948ம் ஆண்டிலே மனித உரிமைப்பிரகடனத்தை ஏற்படுத்தியது. அடிப்படை மனிதவுரிமைகள் மதிக்கப்படும் ஒரு நாட்டிலே உள்நாட்டுப் பூசலோ, வெளிநாட்டுப் போரோ ஏற்படாது என்பது இப்பிரகடனத்தின் எதிர்ப்பார்ப்பாகும். மனித மாண்புகளை சிறப்புறச் செய்யும் சாதனம் கல்வியே. கல்வியே அடிப்படை மனிதவுரிமைகளைப் பெறவும், மதிக்கவும், பேணவும், வழங்கவும் வேண்டிய திறனைத்தரவல்லது. கல்வி பெறும் வாய்ப்பும், வசதியும் ஏற்படுத்துவதே மனித குல முன்னேற்றத்திற்கு முதலீடாகும் என உலக நாடுகள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளன. கல்வியைக் கருவியாகக் கொண்டு, மனித வாழ்வைப் பாகுபாடற்ற சமத்துவ அடிப்படையில் விருத்தி செய்து " யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பு நிலைக்கு உயர்த்த இக் கல்வி எமது சமூகத்திற்கு பாகுபாடுகளின்றி வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட காலங்களுக்கு முன்னால் கல்வித்தீண்டாமைக்கு உட்படடிருந்த மலையக மக்கள் இன்று படிப்படியாக அவர்களது அரசியல் பாதுகாப்புக்கும், சமூக வளர்ச்சிற்கும் இன்றியமையாதது கல்விதான் என ஏற்று மலையக மக்களின் கல்வி அறிவு வளர்ச்சியில் உயர்வை ஏற்படுத்தி இழந்து போன உரிமைகளை பெற வேண்டும் என உணர்ந்துள்ளனர். இந்நூற்றாண்டிலே, உலகிலுள்ள சமூகங்களில் பல விழிப்படைந்து தங்களின் உரிமைக்காகப் போராடி அதில் வெற்றியும் பெற்றுள்ளன. இவற்றிற்கு அடிப்படை காரணம் கல்வி. எனவே எமது மக்களும் கல்வி எனும் கண் கொண்டு தாம் இழந்து போன முகவரிகளை தேட வேண்டும். எல்லாம் தானாக வழங்கப்படும் என எதிர்பார்த்து எதிர்பார்த்து நிற்போமாயின் எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு நாமே தடைக்கற்களாகி விடுவோம். எதுவும் தானாக கிடைக்காது போராடி பெற வேண்டும் (யுத்தமல்ல) எனும் விழிப்புணர்வு எற்பட வேண்டும். மலையகத்தின் கல்வியமைப்பு உடனடியாக மாற்றப்பட வேண்டும். ஆங்கில பாடத்தை கூட தமிழில் கற்கும் பரிதாப நிலை ஒழிய வேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்படும் இலக்குகள் இன்னும் விரிவடைய வேண்டும். கல்வியற்கல்லூரிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டால் மட்டும் போதும் என என்னும் எண்ணங்கள் மாற்றமடைந்து ஒவ்வொறு வீட்டிலும் ஒவ்வொரு கல்விமான்களை உருவாக்கி நாங்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல என இவ்வுலகிற்கு காட்ட வேண்டும். சகல துறைகளிலும் எமது இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை பெற்று கொடுத்து இம் மலையகத்தை பொன் விளையும் பூமியாக்கி எம் முகவரியை இவ்வுலகிற்கு நிலைநாட்டும் அந்த நாளே எம் உண்மையான விடுதலை நாளாகும்.

ச.பிரதீபன், விடுகையாண்டு
முகாமைத்துவ நிதிப்பீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தாயின் பொழுது

கீழ் வானம் சிவக்கும் முன்னே
சிறடிக்கும் நித்திரையில்
கிள்ளி விட்ட பிள்ளையென
"கிண்" என்று எழுந்து விட்டாள்

இயற்கையிலே மலசலக்கூடம்
இன்னலிலே குழாயடி
ஏக்கத்தில் மனது போல்
எரிகின்றது அடுப்புமிங்கே

தேசிய உணவாக்கி சாய
தேனீரும் உடனூற்றி
பிள்ளைக்கும் கொழுநனுக்கும்
பேணியே அளிக்கின்றாள்

பத்தாம் நம்பர் மலை செல்ல
படங்னினை சுற்றிக்கொண்டு
பால் குடிக்கும் பாலர்களை
பக்கத்திலே இருத்தி

பிள்ளை மடுவம் நோக்கி
பேதை நடக்கின்றாள்
தாய்மையின் உணர்வு
தள்ளாட வைக்க

கங்கானியின் கண்டிப்பு
கண்முன்னே வர
கண்கலங்க விரைகிறாள்
காலத்தின் நிலையை எண்ணி

விடிவு வருமா? என
விளக்கம் சொல்லத் தெரியாது
விடியலிலே நடக்கின்றாள்

கங்குள் கழியவில்லை
காட்டுப்பாதை தனில் நடந்து
குருக்குப் பாதை தனிலே
குடு குடு வென ஓடி

நிரைப்பிடித்து பொழிப்போட்டு
நிற்கவும் நேரமின்றி
வெந்நீராய் வியர்வை வடிய
வெந்து தணிகின்றாள்

தேசத்தை உயர்த்தி விட
தன் முதுமை கூனலாக்கும்
தாய்மையின் சின்னமிவள்
தரமுயர்ந்த தாய் இவளே


ஐந்துமணி சங்கடிக்க
அழகு பிள்ளை நினைவுடனே
மடுவம் நோக்கி மனது பாய
மனை நோக்கி விரைகிறாள்.

கங்குள் கவிழ்ந்து எங்கும்
கருமை படர்ந்து வர
தள்ளாட்ட நடையுடன்
தலைவன் தானும் வர

சிமிழி லாம்பை ஏற்றுகிறாள்
சின்ன சின்ன ஏக்கத்துடன்
விடிவு வருமா?
விடை காண கேள்வியுடன்
கழிகிறது ஒரு தாயின் பொழுது.

சு. கோவர்தனி
தரம் - 12
கலைபிரிவு
நு/வ/ ராகலை த.மா.வி
அல்கரனோயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With best compliments from:**

# T.C.C



# THIRU COMPUTER CENTRE

*Specially Designed courses for O/L & A/L Students*

**DIPLOMA IN SOFTWAR ENGINEERING**

- *Introduction to computer*
- Ms- Windows 98, 2000, XP
- Ms- Disk Operating System
- Ms- Word
- Ms-Excel
- Ms- Access
- Ms- Power Point
- Introduction to Internet & E-Mail

**CERTIFICATE IN MS- OFFICE**

- Introduction to computer
- Ms- Windows 98, 2000, XP
- Ms- Word
- Ms-Excel
- Ms- Access
- Ms- Power Point
- Introduction to Internet & E-Mail

No Language Problem
Experienced Lectures
Unlimited Practical Hours

**DIPLOMA IN TYPE SETTING**

- Introduction to computer
- Ms- Windows 98
- Adobe page Maker
- Adobe Photo Shop
- Coreldraw
- Photo Paint

**KIDS COURSES**

Stage 1

- Games
- Drawing
- Kids Special package

Stage 11

- Games
- Paint
- Note Pad
- Word Pad
- Ms- Word
- Ms- Excel
- Kids Special Package




*Good things are not cheap cheap things are not good*

**# 79/B, Main Street,**
**Maskeliya.**
**Tel: 052-2277006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Best Wishes

# GNANAM IMPORTS (PVT) LTD




No. 79,
5th Cross Street
Colombo-11

Tel: 2449255, 2439334, 2441944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM:

*Moving Tours Bright prospectus......*

# KeyPlan Computer Academy



Best & First

**All Education Systems are equal to Top Technical Institution in Asian Countries**

**Dial [0094] 52 2277372**

**keyplan_msk@yahoo.com**

**www.keyplan.itgo.com**

**# 116, Main Street,**
**Maskeliya, Sri Lanka.**

Head Office : # 7 2/4 Orchard Shopping Complex
Galle Road, Colombo -06, Sri Lanka
Dial [0094] 75 55 3666 keyplan@isplanka.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# INTERWOOD

**Importers & Dealers**

PLYWOOD
MDF
CHIP BOARD
DECORATIVE PLYWOOD
DECORATIVE LAMINATES
HARD BOARD

#145, Mahavidyalaya Mawatha,
(Barber Street)
Colombo-13,
Sri Lanka.

Tel: 94-1-473144, 389441
Fax: 389442

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# A. B. C.
## MERCHANTS




Commission Agents,
Dealers in Grams, Rice, Local Produce,
Exporters & Importers

**131, OLD MOOR STREET,**
**COLOMBO-12.**

---

**Our Best Wishes**

# BRIGHT
Academy

**Higher Studies**
A/L, G.A.Q Class
Tamil
Political Science
Logic
Geography
Hindu Culture

**Bright**
**Academy of Computer Science**
(B.C.S)




**114, Nuwara Eliya Rd,**
**Talawakella**
**Tel: 0722-585395**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST WISHES FROM:-

# MASKELIYA STATIONER

Offset & Letter Press

**Estate & Commercial Printers**
**Stationers, Rubber Stamp Makers**

No.25/7, 9th Street
Maskeliya.

Tel: 052-2277123 Fax: 052-2277473

E-mail: mstationer@yahoo.com

*WITH BEST WISHES FROM:-*

# SWIEDISH
COMMUNICATIONS

Photo copy, Fax service, I.D.D and Local Calls

129, Main Street,
Hatton.

Tel: 051-2223626
051-2223627

E-Mail:swiedisg@mail.ewist.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

# R.M. ENTERPRISE

General Hardware Merchants, Estate Suppliers,
Paints, PVC Fitting & Electrical Goods

No,90A, DIMBULLA ROAD
HATTON

KT
Estd 1988

Our Best Wishes

# KULAY TRADING

GENERAL HARDWARE MERCHANTS, ESTATE SUPPLIERS & ELECTRICALS.

No. 94A Side street,
Hatton.
Sri lanka.

Tle. +94 51 50702222 , 2222969,2223065
E-Mail : kulaytrd@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம்

இந்த நாள் இன்றைய
இளைஞனிடம் - நாளையோ
உன்னிடம்
இன்றே உனது நாளைய
திட்டத்தைத் தீட்டு
நீ தீட்டும் திட்டத்திலேயே
உன் எதிர்காலம் உண்டு
உன் எதிர்காலத்தை நீ
மாற்று - நாட்டின் எதிர்காலம்
தானாய் மாறும்
இந்த உலகமே - உன்னை
வீழ்த்த காத்துக் கிடக்கிறது
நாளைய இளைஞனே - நீ
துணிந்து வா.......
முன உறுதியோடு
எழுந்து வா........
ஊன்னை திட்டித் தீர்க்கும்
காலங்களுக்கெல்லாம்
ஒரு பதிலாக உன்
எதிர் காலத்தை மாற்று
நீ எங்கு சென்றாலும்
உன்னை வீழ்த்துவதற்காக
ஆயிரமாயிரம் நயவஞ்சகர்கள்
அவர்களின் மோசவலையில்
சிக்காமல் விலகி வா.....
இழிவு கொண்டு உன்னை
பார்த்த கண்கள் - நாளை
வழியும் உந்தன்
வெற்றி கண்டு
அவை வெடித்துக்
தெறிக்கட்டும்
உன் இலக்கை
உறுதியாக எண்ணி
உருகிடு
உன் இலக்கில்
வெற்றி காண - நாளும்
செயலில் உருளடு
உன்னை நீ திருத்து
உலகம் தானாய்
திருத்தும் - என்று எண்ணி
இன்றே உன்னை நீ
மாற்றிக்கொள்
உன்னை பார்த்து திருந்த
இந்த உலகமேகாத்துக்
கிடக்கும்
நாளைய தலைவனாகப்
போகிறவனனே
உனக்குக் கீழே வளரும்
தலைமுறையும் சற்றே
சிந்தையில் வை......
ஆவர்கள் எதிர்காலமோ
நாளைய தலைவனாகும்
உன் கையில் .... அப்பப்பா
எத்தனை பொறுப்புக்கள்
உன்னிடம் - எதிர்காலமே
உன் கையில் தானடா
நீ எடுக்கும் முடிவே
நாளைய சமூகத்தை
காப்பாற்றும் ! உன்
முடிவு சற்றேனும் தடம்
புரண்டால் கேள்விக்குறியாகும்
நாளைய சமூதாயம்
உன் வாழ்வு நாளை
தென்றலாய் வீசவும்
புயலாய் மாறவும்
எதிர்காலத்தை இன்றே
நினைத்துப் பார்
நிலைகுழைந்து கிடக்கும்
சமுதாயத்தை நாளையாவது
நரகத்திலிருந்து மீட்டெடு
இன்றைய உலகமே
ஏதொ ஓர் தேடலை
நோக்கி பயணிக்கிறது
இனி நீ உருவாக்கும்
சமுகமாவது ஒரு குறிக்கோளுடன்
தனது பயணத்தத்
தொடரட்டும்.
உன்னால் உருவாகும் - ஒரு
புது உலகத்தையே
வெற்றிப் பாதையை நோக்கி
அழைத்துச் செல் !
ஊன் வாழ்வே இன்பமாய்
பொங்கும் உன் நாடே
உன்னை புகழும்
இதை எண்ணி எண்ணி
துணிந்து வா....புது
உலகம் உன்னால் மலரட்டும்
புதவாசம் உன்னால் பரவட்டும்
இன்றைய நல் உள்ளங்களின்
ஏக்கமும் கனவும் - நாளைய
இளைஞனின் எதிர்காலமே....!


S.யாகிஷன், தரம் 10B, க/ இந்து சிரேஸ்ட பாடசாலை, கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

# WIJAYA BOOK STALL

In past New Kesavan book stall



No.52, Dunbar Road
Hatton

Tel: 051 2222977
051 2222504

BEST WISHES FROM:-

# SUPPER CHOICE

No.188, 6D 3rd Floor
Keyzer Street,
Colombo-11

TP: 0777-300557
0777-485491

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

தங்க நகை பிரியர்களுக்கு இனிமையான தெரிவு
**மஸ்கெலியா** நகரில்
மக்கள் வங்கியின் முன்னால்

# AKSHAYA
## JEWELLERS

GOLD FASHIONABLE JEWELLERS



*LETTER TYPING*
*E-MAIL*
*INTERNET ETC*

Selling Gold, Platinum & Silver
Buying Gold, Platinum & Silver
Money Exchange
JP Authorizing & Translations

*PAWNING CENTRE*
*COMMUNICATION*

**NO.160B, MAIN STREET,**
**MASKELIYA**
**TEL:- 052-2277060**
**E-Mail: golden akshaya@yahoo.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

## Sri Ranjitha Jewellers



**MANUFACTURING JEWELLERS
& PAWN BROKERS**



177/5, SEA STREET,
COLOMBO-11.

TEL: 2332637
2459179
FAX: 2430378

*WITH BEST COMPLIMENTS FROM:*

**The Trusted Anti- ulcerant**

Wishing you
Good Health,
Now & Always

**Ocid**
(Omeprazole 20mg Capsules)

**Ciprobid**
**Stemiz**
**Tramazac**

**Zydus Cadila**
Healthcare Limited

**INTERNATIONAL DIVISION**
**'Zydus Tower', Satellite Cross Roads, Ahmedabad 380 015. India**
**Tel:+91-79-68 68 100 (20 lines) Fax: +91-79-686 2368**
**website: www.zyduscadila.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Best Wishes

AJ

# ARADANA

Jewellers



Dealers in Silver Jewelleries



No.25, Beach Street,
Colombo-11.

Tel: 2382165

---

Our Best Wishes

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய
ஒரே இடம்

**Kகிருஸ்னா பவுன் புரோக்கர்ஸ்
ஆன்ட் ஜீவலர்**

**இல. 19, நிக்கலோய ரோட்
இரத்தோட்ட
தொ.பே: 066-2255243**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# Kalaimagal Stores

(Pawn Broker)

DEALERS IN AGRO - CHEMICALS, VEGETABLE SEEDS

Tel /Fax: 052-2265212
Tel: 052-2265312
052-2265412
0722-814110

53 e, Temple Building,
Ragala Bazaar,
Haigranoya.

With best compliments from:

# Kavitha
Jewellery





No.81, Ragala Bazaar,
Tel: 0522-65457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரிய பெற்றோர்கள்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" ஆம், எமது பெற்றோர்கள் கடவுளால் எமக்கருளப்பட்ட கொடையாவர். இவ்வுலகத்திற்கு எம்மை அளித்து மனிதகுலத்தின் மகிமையை வளர்க்க தம்மையே அர்ப்பணம் செய்து எமக்காகவே வாழும் எம் பெற்றோர்கள் பெருமைக்குரியவர்கள் ஆவர். சிறந்த பெற்றோரின் நிழலின் கீழ் வளரும் பிள்ளைகளின் மத்தியில் மனித உறவுகள் சிறப்பாக வளர்கின்றன. நல்லதொரு குடும்பமே உலக முன்னேற்றத்தின் அத்திவாரமாகும். எனவே இவ்வுலகம் செழிப்புடன் தழைத்து வளர்வதற்கு ஆணிவேராக நிற்பவர்கள் எம் ஒவ்வொருவருடைய பெற்றோருமே ஆவர்.

எம் வாழ்வின் ஒவ்வொரு வெற்றிற்கு பின்னாலும் இருப்பது பெற்றோர்களே. எமக்கு சிறந்த குருவாக, நண்பராக, பலவடிவங்களிலும் எம்முடன் பங்கு கொள்கின்றனர். நாம் ஒரு தாயின் கர்ப்பத்தில் கருத்தரிக்கும் அந்த பொழுதில் இருந்தே எம் பெற்றோர்கள் தம் குழந்தைக்காக தம்மையே அர்ப்பணிக்கின்றனர். அவர்கள் செய்யும் ஒவ்வொறு செயலும் பிள்ளைகளின் நலனுக்காகவே அமைகின்றது. அன்பு என்பதன் ஆரம்ப அனுபவங்களை நாம் எமது பெற்றோரின் மூலமாகவே காண்கின்றோம். அவர்களின் அன்பு எல்லையற்றது. இவ் உலகியல் வாழ்க்கை நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்றது. எனினும் என்றுமே நிலையானது எம் பெற்றோரின் அன்பு ஒன்று மட்டுமே.

பத்து மாதம் எம்மை சுமந்து தனது உயிரையே விட்டு பிரிவது போன்ற மரண வேதனையை பிரசவத்தின் போது அனுபவித்து மீளுகின்ற எம் தாய்மார் மறுஜென்மம் எடுத்ததற்கு சமமானவர்கள். இவ்வாறாக எம்மை இவ்வுலகத்திற்கு தந்த தாயை என்னென்பது? அது மட்டுமன்றி தன் உடலின் பலத்தை பாலின் மூலமாக எமக்கு ஊட்டி வளர்க்கின்றாள்.

எம்முடைய தேவைகள் அனைத்தையும் அறிந்து அவற்றை ஒரு குறைவுமில்லாது நிறைவேற்றுவதற்காக நேரகாலம் பாராது உழைத்து எம் அனைத்து கனவுகளையும் நனவாக்கும் எம் தந்தைமார்களும் போற்றத்தக்கவர்கள்.

எம்மைத் தம் கண்மணிகளைப் போல பாதுகாத்து உலகில் நாம் உயர்வதற்கு ஏணியாக ஏற்றி வைக்கும் எம் பெற்றோர்கள் தெய்வத்திலும் மேலானவர்கள். இறைவனை நாம் கண்களால் காண முடியாது. எனினும் எம் ஒவ்வொருவரினதும் கண்கண்ட தெய்வம் பெற்றோர்களாவர். எனவேதான் குரு தெய்வத்திற்கு முதன்மையாக மாதா, பிதாவை வைத்து மாதா பிதா குரு தெய்வம் என்கின்றோம். பராமரிப்பின்றி அநாதைகளாக விடப்பட்டால் எம் ஒவ்வொருவரினதும் வாழ்வும் கேள்விக்குறியாகி விடும். அவ்வாறான நிலையிலிருந்து எம்மை மீட்பது எம் பெற்றோரே.

எம் ஒவ்வொருவரினதும் குருவாக விளங்குபவர் எம் பெற்றோர்களே. ஐந்து வயது பூர்த்தியடைந்த பின்னரே பாடசாலைக்குச் செல்கின்றோம். அதற்கிடைப்பட்ட காலகட்டத்தில் எம் பெற்றோர்கள் தொடர்பாடல், ஏனையவர்களுடன் சுமூகமாக பழகுதல், விளையாடுதல் போன்ற சகலவிதமான ஆரம்ப அறிவையும் எமக்கு வழங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை வளரும் சூழ்நிலைக்கமையவே அதன் செயற்பாடுகளும் காணப்படும். அவ்வாறான சிறந்ததொரு சூழலை எம் பெற்றோர்களே எமக்கு அளிக்கின்றனர். இளமையில் கல்வி சிலையில் எழுத்து ஆகவே எமக்கு கல்விக்கான விதையை விதைப்பவர்கள் எம் பெற்றோர்களே.

பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்குமிடையே ஐக்கியமான உறவானது வளர வேண்டுமானால் பிள்ளைகள் எப்போதும் பெற்றோரிடம் திறந்த மனதுடையவர்களாக இருக்க வேண்டும். குறிப்பாக வாலிபப்பருவத்தை அடையும் போது பெற்றோர்கள் எமது சிறந்த நண்பர்களாக இருக்கின்றனர். இவ் உறவு காரணமாக நாம் எமது பிரச்சினைகளை பெற்றோருடன் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெறமுடிகின்றது. ஏனெனில் அவர்கள் வாழ்க்கை அனுபவங்களை கற்றறிந்தவர்கள் எனவே எம்மை வெளித்தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கின்றனர்.

உலகம் மனிதன் மூலமாகவே இயங்குகின்றது. அம்மனிதனின் இயக்கம் அவரவர் பெற்றோர்களின் கைகளிலே தங்கியுள்ளது. ஏனெனில் தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும் ஆகவே் குடும்பத்தில் ஒற்றுமையையும், சமாதானத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் நிரந்தர அன்பின் அடிப்படையிலான உறவு வளர்வதற்காகவும் பெற்றோர்கள் தம்மை செயற்படுத்துகின்றனர். அவ்வாறான சிறந்த செயற்பாடுகளில் பெற்றோருடன் பங்கு கொள்ளும் பிள்ளையே நாட்டின் சிறந்த பிரஜையாக உருவாகின்றது. அவ்வாறனவர்களின் கைகளிலே எதிர்காலம் தங்கி நிற்கின்றது. எனவே எதிர்கால சந்ததிக்கு சிறந்ததொரு முன்னோடியாக எம் ஒவ்வொருவரினதும் பெற்றோர்கள் திகழ்கின்றனர்.

நாம் வாழும் சமூகத்தில் பல்வேறு துறைகளிலும் ஆற்றல்களை உணர்த்துபவர்களை காண்கின்றோம். ஒவ்வொரு மனிதனுக்கும் பல்வேறுபட்ட திறமைகள் காணப்படுகின்றன. அத்திறமையினை இனம் கண்டு அதனை விருத்தி செய்து உலகத்திற்கு அவ்வாற்றல்களை வெளிக்கொண்டுவருபவர்கள் எம் ஒவ்வொருவரினதும் பெருமைக்குரிய பெற்றோர்களே. உதாரணமாக உலகம் போற்றும் விஞ்ஞானிகளுள் ஒருவரான சேர் ஐசாக் நியூற்றன் பாடசாலை சென்று கல்வி பயிலவில்லை, எனினும் அவர் சிறந்த ஆய்வாளராக விளங்கினார். எனவே அவரின் பெற்றோர் மகனின் போக்கிற்கமைய அவனுக்கு தோள் கொடுத்து பல வகையிலும் அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்றனர் அன்று நியூற்றனைப் போல இன்றும் எத்தனையோ நியூற்றன்களை பெற்றோர் உருவாக்கி கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான பெருமைக்குரிய பெற்றோர்களை நாம் போற்றிப்பாதுகாக்க வேண்டும். எனினும் இன்று எம் நாட்டில் முதியோர் இல்லங்கள் அதிகரித்து வருகின்றன. எனினும் அவர்கள் தம்பிள்ளைகளைக் குறை கூறமாட்டார்கள். தம்பிள்ளைகள் நன்றாக வாழவேண்டும் அவர்களுக்கு இடையூறாக தாம் இருக்கக்கூடாது என நினைத்து ஒதுங்கி வாழுவதைக்கூட தமது கடமையாக நினைத்து தமது இறுதிக் காலங்களை கழிக்கின்றனர்.

பெற்றோர்கள் எமக்காகவேதான் உடலின் பலம் உள்ளவரை ஒவ்வொரு செயலையும் செய்கின்றனர். அவர்களின் தியாகத்திற்கு நிகராக ஒன்றுமில்லை. எனவேதான் தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடன் பழகும் அனைவரும் எமது இன்பத்தில் பங்கெடுப்பர். எனினும் வெற்றியிலும், தோல்வியிலும் எம்முடனே கூட இருந்து எமது தோல்விகளையெல்லாம் வெற்றியின் படிக்கட்டுகளாக மாற்றி எமக்கு இறுதிவரை ஊக்கமளிப்பது எம் ஒவ்வொருவரினதும் பெற்றோர்களே.

அனைத்து பெற்றோர்களினதும் நோக்கம் ஒன்றே. என் பிள்ளை படித்து முன்னேறி உலகம் போற்றும் வண்ணம் வாழ வேண்டும் என்பதாகும். வறுமைக் கோட்டின் அடிமட்டத்தில் வாழ்க்கை நடாத்துகின்ற பெற்றோர்கள் தாம் பட்ட கஷ்டங்களை தம் பிள்ளைகள் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக நெற்றி வியர்வை சிந்தி பாடுபடும் எம் பெற்றோர்களை எதற்கு நிகராக கூறுவது? தங்களை நிலமாக அமைத்துக் கொண்டு எம்மை கோபுரம் போன்று வளர விட்டு எம்மைத் தாங்கிக் கொள்கிறார்கள்.

இவ்வாறாக தம் வாழ்க்கையை எமக்காகவே அாப்பணித்து எம்முடைய வாழ்வை வளமாக்கும் எம் ஒவ்வொருவரினதும் பெற்றோர்களே பெருமைக்குரியவர்கள். அவர்களின் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவேற்றி எமது பெற்றோர்களுக்கு பெருமையை தேடிக் கொடுப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். பெருமைக்குறிய பெற்றோர்களை என்றும் பெருமையுடன் போற்றுவோமாக.

G. வினோஷினி
தரம்-13 கலைபிரிவு
ஸ்ரீ முத்துமாரியம்மன் த.ம.வி,
கம்பளை.

---

**<u>இதயம்</u>**

உன் புருவங்கள் விற்கள் தான்
உன் பார்வையும் கணைகள் தான்
மௌளணிக்கிறேன்...............
என் இதயபூட்டுக்களை
உடைப்பதற்கு
உனக்கு
அது பயன்படும்
என்று மட்டும் எண்ணிவிடாதே
உன்னால் அல்ல
யாராலும் அது முடியாதம்மா
இல்லா விட்டால் தான்
அவளை எப்போதோ
அதிலிருந்து யாராவது
அபகரித்து சென்றிருப்பார்களே..........!

ம.ரமேஸ்குமார்,
விடுகையாண்டு
முகாமைத்துவ நிதிப்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக மக்களும் மனித உரிமைகளும் - ஒரு குறும்பார்வை

உலக அரசியல் மனித உரிமைகள் (Human Rights) என்ற சொல் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரே பிரபல்யமானது ஐக்கிய நாடுகள் சபையினது உதயமும் அதன் "அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனமும்" (UDHR) மனித உரிமைகளின் தோற்றுவாய்களுக்கு முக்கிய அத்திவாரம் இட்டதென்று கூறலாம். இந்த வகையில் மனிதனாக பிறந்த ஒவ்வொரு பிரஜையும் பெற்றிருக்க வேண்டிய மிக முக்கிய தேவைப்பாடாக மனித உரிமைகள் காணப்படுகின்றது. ஆயிரம் இந்த உரிமைகள் எல்லா திறத்தவர்களையும் குறிப்பாக எல்லா சமூகத்தவர்களையும் உரிய முறையில் சென்றடைந்துள்ளது என்பதை ஆராய வேண்டிய அவசிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் இந்நாட்டின் நூற்றென்பது வருடகால வரலாற்றைக்கொண்ட மலையக தேசிய சிறுபான்மை சமூகத்தவர்களை எந்தளவிற்கு சென்றடைந்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுறையின் நோக்கமாகம் காலப்போதாமை, பரப்பின் அளவை கருத்திற்கொண்டு மிக முக்கிய உரிமைகளை மட்டுமே ஆய்வுக்குட்படுத்த ப்பட்டுள்ளது, என்பதை இதன்கண் கவனத்திற்குட்படுத்த கடமைப்பட்டுள்ளேன்.

### மனித உரிமைகளும், அடிப்படை உரிமைகளும் ஒன்றா?

மலையக மக்களது மனித உரிமைகளை பற்றி ஆராய முற்படுவதற்குமுன் மேற்கூறப்பட்ட இரண்டு எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகளை தெளிவுப்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. மனித உரிமைகளலென்பது "ஒரு மனிதன் கௌரவமாகவும் நாகரீகமாகவும் பூரணமாகவும் வாழ்வதற்கு மிக அவசியமான சமூக தேவைப்பாடுகள்" எனலாம். அதாவது சர்வதேச சமவாயங்களினாலும் பட்டயங்களினாலும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமூக தேவைப்பாடுகள் மனித உரிமைகள் எனலாம். மேற்கூறப்பட்ட மனித உரிமைகளில் எவை ஒரு அரசின் அரசியலமைப்பின் மூலம் ஏற்று அங்கிகரிக்கப்பட்டுள்ளதோ அவையே அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) வேறு வார்த்தைகளில் கூறினால் அதன் அரசியலமைப்பின் முலம் ஏற்று அங்கிகரிக்கப்பட்டவைகள் மட்டுமே அடிப்படை உரிமைகளாக கருதப்படுகின்றது. எனவே மனித உரிமைகள் எல்லாம் அடிப்படை உரிமைகளாகிவிடுவதில்லை. ஆயின் அடிப்படை உரிமைகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் மனித உரிமைகளாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் படி சர்வதேச சமவாயங்களினால் அங்கிகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளையும் எமது அரசியலமைப்பின் மூலம் அங்கிகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் மலையக மக்கள் எந்தளவீற்கு பெற்றுள்ளார்கள் என்பதை ஆய்வதே எமது நோக்கமாகும்.

பொதுவாக உரிமைகளில் வகுப்பாக்கம் மிக நீண்டு செல்லக்கூடியதாகையால் இதன்கண் மிக முக்கிய உரிமைகளான குடியியல், அரசியல், பொருளாதார மற்றும் குழு உரிமைகள் எம்மக்களை எந்தளவிற்கு சென்றடைந்துள்ளது என்பதே ஆய்வுக்குட்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியியல் உரிமைகளுடன் வாழும் குடிகளா?

மனிதனின் நாளாந்த வாழ்க்கைக்கு மிக அவசியமான உரிமைகளாக குடியியல் உரிமைகள் காணப்படுகின்றது. இவையில்லாமல் அன்றாட மாமுல் வாழ்க்கையை நடத்த முடியாதென்பதே உரிமையியலாளர்களது கருத்தாக உள்ளது இக்குடியியல் உரிமைகளில் குறிப்பாக கல்வி கற்பதற்கான உரிமை, வசிப்பதற்கான உரிமைகளை முனைப்பாக நோக்குவதே சாலப்பொருத்தமாகும்.

பொதுவாக வாழ்வதற்கான உரிமைகளில் கல்விகற்பதற்கான உரிமையே ஜீவாதார உரிமையாக காணப்டுகின்றது. ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியை அளவிடும் முக்கிய அளவீடாக இக்கல்விக்கான உரிமைகள் காணப்படுகின்றது. என்பதே யதார்த்தமான உண்மை இத்தனை முனைப்பான இவ்உரிமை மலையக மக்களை எந்தளவிற்கு சென்றடைந்துள்ளது என்பதே எம்முன் எழும் வினாவாகும்.

இலங்கையின் தேசிய மட்ட கல்விவளர்ச்சி மலைப்போன்ற வளர்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருக்க மலையக கல்வியோ இன்னும் மடுவின் நிலையில் இருக்கின்றமையே கவலைக்குரிய உண்மை. மலையகத்தில் இக்கல்வி பின்னடைவிற்கு கல்விக்கான உரிமைகளில் காணப்படுகின்ற பல தடைகளே காரணங்களாக உள்ளன. பிரதானமாக கல்வி நடவடிக்கைகளில் காணப்படுகின்ற அரசியல் தலையீடு மிக முக்கிய உரிமையாகவே கருதவேண்டியுள்ளது. பாடசாலைகளை பிரச்சார முகாமாக்க முயலும் அரசியல் சுயலாபங்களை பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. தவிர பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் காணப்படுகின்ற அர்த்தமற்ற மட்டுப்பாடுகளும் பல மாணவர்களது கல்விக்கான குடியியல் உரிமைகளில் கைவைத்துள்ளமை கவலைக்குறியது. இவற்றோடு அனுமதிக்கான தகுதிகளாக பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றமையும் மூடிமறைத்துவிட முடியாது. மாணவர்களது அனுமதிக்கான பணம் தான் தீர்மானிக்குமென்றால் இச்சமூகத்தின் பெரும்பாலானவர்களது கல்விநிலை என்னாவது? மாறாக பெறும்பாலானவர்கள் ஏழையாக பிறந்தது இவர்களது குற்றமா? என்ற கேள்விகளே எழுகின்றது. இத்தகைய தடைகளை குடியியல் உரிமை மீரல்கள் என்று கூறாமல் வேறு என்னென்று கூறுவது?

இதில் ஆழ்ந்து கவனிக்க வேண்டிய இன்னொறு விடயம் யாதெனில் மேற்கூறப்பட்ட கல்விக்கான உரிமை மீரல்களும் அதனால் ஏற்பட்ட ஆரோக்கியமற்ற கல்வி வளர்ச்சியும் இதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய குடியியல் உரிமைகளான எழுத்துரிமை, பேச்சுரிமை, சிந்தனை செய்வதற்கான உரிமை, பிரச்சாரம் செய்வதற்கான உரிமை, பிரசுரம் செய்வதற்கான உரிமைகளை பாதித்துள்ளமை என்பதே ஆகும்.

இனி குடியியல் உரிமைகளில் இன்னொறு முக்கிய உரிமையான வசிப்பதற்கான உரிமைகள் பால் எமது கவனத்தை திருப்புவோம். இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 14(H) ஆனது பிரஜை ஒருவர் இலங்கையின் எந்த இடத்திற்கும் செல்வதற்கும் வசிப்பதற்குமான சுதந்திரத்தினை வழங்குகிறது. ஏறத்தாழ இருநூற்றாண்டு இந்நாட்டிற்காக இன்னுயிரை கொடுத்து காட்டை நாடாக்கி பொருளாதாரத்தின் முதுகெழும்பாக வசிப்பதற்கு சொந்தமான நிலமும், வீடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடும் அற்றவர்களாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் ஏற்பட்டுள்ளது.

வசிப்பதற்கான உரிமை என்பதை ஆரோக்கியமான பாதுகாப்புடனான வசிப்பதற்கான உரிமை என்றும் பொருட்கோடல் செய்யலாம். அப்படியாயின் ஆரோக்கியமான சுகாதாரமான வாழ்விட வசதி இவர்களுக்கு கிடைத்துள்ளதா? என்று ஒரு கேள்வியை எழுப்புவோமாயின் நவீன விஞ்ஞான உலகிலும் எட்டடிக்குள் வாழ்க்கையை முடக்க வேண்டிய துயரத்திலே பெரும்பாலானவர்களது வாழ்க்கை காணப்படுகின்றது. லயச்சிறை வாழ்க்கைக்கு இன்னும் விடுதலை கிடைக்க வில்லை என்பது தான் முற்றான உண்மை. தன் குடியிருப்பை திருத்தவும் நிர்வாகத்தின் முன் அனுமதியை பெறவேண்டிய நிலையோடு தோட்ட பரிபாலனத்தை கம்பனிகளிடம் தாரை வார்த்தமை எஞ்சியிருந்த ஒரு சில நலன்புரி வசதிகளுக்கும் முற்று வைத்து விட்டது.

அடிப்படையில் மனிதனது அடிப்படை தேவைகளில் ஒன்றான உறையுள் உரிமைகளற்ற அனாதைகளாகவே மலையக மக்களது வாழ்க்கை செல்கிறது. மொத்தத்தில் குடியேற்ற வாதத்தில் கொண்டு வரப்பட்ட கொத்தடிமை நிலை இக்குடியரசிலும் தொடரத்தான் செய்கின்றது. இந்நிலையில் மலையக மக்கள் குடியியல் உரிமைகள் பெற்ற குடிகளாக வாழ்கின்றார்களா என்ற சந்தேகத்தை எழுப்பாமல் இருக்க முடியவில்லை.

<u>அரசியல் உரிமைகள்.</u>

இன்றைய உலகமே அரசியல் உலகமாகவே மாறியுள்ளது. அரசியல் இன்றி அணுவும் அசையாது என்ற நிலை எப்போதோ ஏற்பட்டுவிட்டது. இவற்றுக்கு மத்தியில் மலையக மக்களது அரசியல் உரிமைகளை ஆராயாமல் இருக்க முடியாது. மனிதனது அரசியல் ரீதியான ஆளுமைகளை வளர்ப்பதற்கான அடிப்படையான உரிமைகளாக அரசியல் உரிமைகள் காணப்படுகின்றது. அரசியல் உரிமைகளில் அடிப்படையானதாக காணப்படுகின்ற வாக்குரிமை பால் எமது முதல் பார்வையை திருப்புவோம். இலங்கையின் முதல் பாராளுமன்ற தேர்தலிலே மலையக மக்களது பிரதிநிதிகளது எண்ணிக்கை அதிகரிப்பை சகித்துக்கொள்ள முடியாத பெரும்பான்மை மக்களது அரசாங்கம் 1948 ம் ஆண்டு இம்மக்களது பிரஜாவுரிமையை பறித்தது. சுதந்திரம் பெற்ற அடுத்த கனமே சுதந்திர நாட்டின் ஒரு மக்கள் கூட்டத்தின் பிரஜா உரிமையை பறித்த உலக வரலாறு இதுவாகத்தான் இருக்க முடியும் இப்பிரஜா உரிமை பறிப்பானது வெறுமனே பிரஜை அந்தஸ்தை மட்டுமன்றி அரசியல் உரிமையின் அடி நாதமான வாக்குரிமையையும்தான் பறித்து விட்டது.

இது அரசியல் அந்தஸ்த்தற்ற அரசியல் பிணமாக வாழவேண்டிய நிர்ப்பந்தத்தையே ஏற்படுத்திவிட்டது. இவ்வாக்குரிமை பறிக்கப்பட்ட மக்கள் தோட்டங்களில் கடைசி பிரட்டு ஆட்களாக நேற்றுவரை வாழ்ந்து வந்துள்ளனர். ஆயின் அண்மையில் இவ்வாறு பிரஜா உரிமையற்று வாழ்ந்து வந்த மக்களது பிரஜாஉரிமை அந்தஸ்த்து வழங்கள் சட்டத்தை அனைத்து கட்சிகளும் சேர்ந்து ஆதரித்து நிறைவேற்றியமை மனங்கொள்ள தக்க ஒரு விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியமைத்தல் உரிமை தேர்தலில் போட்டியிடும் உரிமைகளும் அரசியல் உரிமைகளுடன் தொடர்புபட்டவைகளே. பொதுவாக மலையகத்தில் தொழிற்சங்கங்கள் கட்சிகளாக பரிணாமமடைந்துள்ளன. ஆயின் கட்சிகளுக்குள் காணப்படும் முறன்பாடுகள் குடும்ப ஆதிக்கம் தலைமைத்துவ போட்டி சாதிப்பாகுபாடு தலைமை ஆதிக்கம் நிலையான கொள்கையின்மை தொலை நோக்கு சிந்தனையின்மை முதலியன அரசியல் உரிமைகளின் ஆரோக்கியத்தை பலவகையில் பாதித்துள்ளது இது மலையக மக்களை அரசியல் அடிமைகளாகவும் அரசியல் அனாதைகளாகவும் காலங்கடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.

**போதுமான பொருளாதார உரிமைகள்.**

மனித உரிமைகளில் பொருளாதார உரிமைக்கு மிக முக்கியமான ஓர் இடமுண்டு ஒருவன் தனது பொருளாதார ரீதியான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்து கொள்வதற்கான உரிமையே பொருளாதார உரிமையாகும். அடிப்படைகளில் பொருளாதார உரிமைகளை போதுமாக பெற்றுள்ள சமூகமே பூரணமாக வளர முடியும். இத்தகைய பொருளாதார உரிமைகளை மலையகத்தோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாததே. அளவான மணித்தியாலம் வேலை செய்தல் முக்கிய பொருளாதார உரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக எட்டு மணித்தியால வேலை என்பது சர்வதேச சமூகத்தினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார உரிமையாகும். இவ்வெட்டு மணித்தியாலத்திற்கு மேலதிகமாக எந்த ஒரு தொழிலாளியையும் கட்டாயப்படுத்தி வேலை வாங்க முடியாது அதாவது தொழிலாளியே விரும்பினால் அம்மேலதிக மணித்தியாலத்திற்குப்போதுமான கொடுப்பனவு கொடுக்கப்பட்டால் மட்டுமே எட்டு மணித்தியாலத்திற்கு மேலதிகமாக வேலை வாங்கலாம் ஆயின் மலையகத்தில் குறிப்பாக தேயிலைத்தொழிற்சாலைகளில் எட்டு மணித்தியாலத்திற்கு மேலதிகமாக கட்டாயப்படுத்தியே வேலை வாங்கப்படுகின்றது. இதனை முக்கிய பொருளாதார உரிமை மீறலாக குறிப்பிடவேண்டியுள்ளது.

இந்நிலை ஆடை தொழிற்சாலைகளில் வேலைசெய்கின்ற மலையகப்பெண்களுக்கும் காணப்படுகின்றது. தொழிற்சட்டத்தின் படி இரவு நேரங்களில் பெண்கள் வேலைக்கமர்த்தப்படுகையில் பெண் மேலதிகாரிகளும் பெண் காவலாளிகளும் அவர்களது பாதுகாப்பிற்காக இருத்தல் வேண்டும் ஆயின் இந்நடைமுறைகள் எல்லாம் மலையகத்தில் காணப்படுகின்ற ஆடைத்தொழிற்சாலைகளில் கவனத்தில் கொள்ளப்படுவதேயில்லை இதை விட ஆடைத்தொழிற்சாலைகளில் உயர் அதிகாரிகளினால் பெண்கள் மீது நடத்தப்படுகின்ற அத்துமீறல்களுக்கு அளவேயில்லை இவ்வாறான பொருளாதார உரிமை மீறல்களை இவர்கள் உணர்வதுமில்லை உணர்த்தினாலும் அதற்கான எதிர் நடவடிக்கைகளையோ, நிவாரணங்களையோ மேற்கொள்வதுமில்லை.

பொருளாதார உரிமைகளில் தொழிற்சங்கம் அமைப்பதற்கான உரிமையும் முனைப்பானதாகும் பதினைந்து தொழிளாளர்கள் ஒன்று சேர்வதன் மூலம் தமக்கான தொழிற்சங்கத்தை அமைத்துக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இப்படியிருக்க மலையகத்தை சூழ உள்ள பல ஆடைத்தொழிற்சாலைகளில் வேலைக்கு சேரும் போதே இத்தகைய தொழிற்சங்கங்கள் அமைக்கமாட்டோம் என்ற நிபந்தனை அறிக்கையில் கையொப்பம் பெற்றுக்கொண்டே சேர்த்துக்கொள்கிறார்கள் இதனால் தமக்கெதிராக நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற உரிமைமீரல்களுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கைகளை இவர்களால் எடுக்கமுடியாமல் போய்விடுகின்றது.

இவற்றோடு போதுமான சம்பளம் பெறுவதற்கான பொருளாதார உரிமைகளும் போதாமையாகவே காணப்படுகின்றது. இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தும் மிகக்குறைந்த வருமானத்தை பெறும் பாட்டாளி பட்டாளம் இவர்களாகத்தான் இருக்கமுடியும். நாட்டின் பண வீக்கம் விலையேற்றத்துக்கு மத்தியில் இவர்களுக்கு வழங்கப்படும் 121/= அடிப்படை சம்பளம், யானை பசிக்கு சோழப்பொறியாகத்தான் இருக்கின்றது. அப்படியே சம்பளம் உயர்விற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்றாலும் இம்மக்களது தலைமைகளினால் முதலாளிமார் சம்மமேளனத்திடம் மேற்கொள்ளப்படுகின்ற கூட்டு ஒப்பந்தம் (collective agreement) இதற்கு தடையாகவே காணப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக நோக்கின் இந்நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் மூலசக்தியாக மலையக மக்களிருந்தும் இவர்களது பொருளாதார போதாமைகளின் மீது எவரும் அக்கறை கொண்டதாகத்தெரியவில்லை. மாறாக இருக்கின்ற ஒரு சில உரிமைகளும் தமது சுயநலத்திற்கு பயன்படுத்திக்கொள்ளுகின்ற தலைமைகள் தான் காணப்படுகின்றார்கள்.

**மலையகப்பெண் உரிமையுடையவளா?**

குழு உரிமைகளில் இன்றைய உலகில் அதிக உரிமையியலாளர்களால் வலியுருத்தப்படுகின்ற உரிமையாக பெண்உரிமை காணப்படுகின்றது. நாட்டின் தேசிய வருமானத்தில் மிக கூடுதலான வருமானத்தை பெற்றுத்தரும் மூன்றாம் இடத்தில் மலையக பெண்களே காணப்படுகின்றார்கள் இருந்தும் பெண் உரிமைகள் அதிகம் மீறப்படுகிறவளாக தான் மலையக பெண் காணப்படுகின்றாள். வீட்டில் உறவுகளால் உரிமை மீரல்கள், வேலைத்தளத்தில் உத்தியோகஸ்தர்களால் உரிமைமீரல்கள் சமுகத்தில் அதிகார வர்கத்தினால் உரிமைமீரல்கள் என்ற இப்படலம் நீண்டுக்கொண்டே செல்கின்றது. சுயமான சிந்திப்பதற்கான உரிமைகள் ஓய்விற்கான உரிமைகள் பொழுதுபோக்கிற்கான உரிமைகள் எல்லாம் மலையக பெண்கள் விடயத்தில் எட்டாக்கனிகளே.

**மலையகச் சிறுவர்களின் நிலை**

சிறுவர் உரிமைகளும் குழு உரிமைகளில் இன்று அதிக கவனத்தை ஈர்த்துள்ளது சிறுவர்களுக்கு யார் என்பதை வறையரை செய்வதில் உள்நாட்டு சட்டங்களிலும் சர்வதேச சமவாயங்களிலும் வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் 18 வயதிற்குற்பட்டவர்களது உரிமைகள் மலையகத்தில் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகளில் கல்விகற்பதற்கான உரிமையானது கட்டாயமானது கல்வி கற்றல் என்பது ஆரோக்கியமான கல்விகற்றலை குறித்துநிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் மலையக தோட்டப்பாடசாலைகளில் ஆரோக்கியமான இடத்திற்கே இடமில்லை தோட்டப்பாடசாலைகளில் உத்தியோகஸ்தர்களது பிள்ளைகளை சிறப்பாக கவனிக்கப்படுகின்றமை நகர பாடசாலைகளில் தோட்டப்புற மாணவர்களுக்கு பாராபட்சம் காட்டல் முதலியன பிள்ளைகளை சமமாக நடத்தல் என்ற உரிமைக்கே அர்த்தமற்றதாக்கும் செயற்பாடாகவே காணப்படுகின்றது. தவிர இவர்களது உரிமைக்கு மத்தியில் ஆரோக்கியமாக வாழும் உரிமை, விளையாட்டு ஓய்விற்கான உரிமை என்பன கோட்பாடுகளாகவே இருக்கின்றன. இன்றைய சிறுவர்கள் நாளை நாட்டின் வருங்கால தூண்களாவர். ஆயின் சிறுவர்களாகவே இருக்கும் போது இவர்களது உணர்வுகள் பறிக்கப்படுபோது உரிமைகளுக்கு இடமேது.

மலையக சிறுவர்களது மற்றொரு சீரழிவாக சிறுவர் ஊழியத்தைச் குறிப்படலாம். இலங்கையில் படிக்க வேண்டிய வயதில் சிறுவர் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை 500,000 என்றும் அதில் 75% மலையக சிறுவர்கள் என்று ஒரு கணிப்பீடு கூறுகிறது. கடைகளிலும், உணவு சாலைகள், வீட்டு வேளைகள் என்று பிரதான நகரங்களில் மலையக சிறுவர்களது வாழ்க்கை சென்றுகொண்டிருக்கிறது. இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் யாதெனின் இவர்களில் பெரும்பாலானவர்கள் பல்லேறு வழிகளில் சித்திரவதை படுகின்றவர்கள். அரசியலமைப்பின் உறுப்புரை 11 சித்திரவதையை தடுத்தாலும், நடைமுறைகளில் இவர்களின் நிலையை தடுக்க முடியவில்லை இவர்களோடு வாழ்க்கையை சுமந்து தெருச்சிறார்களாக வாழ்கின்ற சிறுவர்கள், சீரழிந்த வாழ்க்கையில் தன்னை இழந்து செல்கின்ற சிறுவர்கள் என்ற இவர்களது துயரத்கதைகள் தொடர்கின்றது. இவ்வாறான போக்குகள் நாளைய மலையகத்தில் பல்வேறு சமூக விளைவுகளை ஏற்படுத்தி விடும் என்பதுதான் உண்மையான உண்மை.

**இந்த உரிமைமீரள்களுக்கு நிவாரனங்கள் இல்லையா**

மலையக மக்களது உரிமை மீரள்களுக்கு முடிவே இல்லையா என்ற கேள்வி எம்முன் எழாமல் இருக்க முடியாது. இதற்கு விடைகான வேண்டிய நேரமும் வந்தவிட்டது இவ்வகையைப் பொருத்தவரையில் மனித உரிமை மீரளுக்கான நிவாரனங்களை மூன்று வழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

அவையாவன

1. உயர் நீதிமன்றம் (Supreme Cort)
2. ஒம்புட்ஸ்மன் (Ombudsman)
3. மனித உரிமைகள் ஆணைக்குழு (Human Rights Commission)

இவைகளுள் உயர் நீதிமன்றம் மூலமான நிவாரணம் அடிப்படை உரிமை மீரலுக்கான அரசியலைமைப்பு மூலமான நிவாரணமாக காணப்படுகின்றது. ஏனைய பொதுவான மனித உரிமை மீரளுக்கான நிவாரணங்களாக காணப்படுகின்றன. ஒன்றுக்கு மூன்று நிவாரணங்கள் இருந்தும் அது முழுமையாக இம்மக்களை திருப்தி படுத்துகின்றதா? என்பதுதான் அடிப்படை கேள்வியாக இருக்கின்றது. இந்நிவாரணங்கள் இம்மக்களை சென்றடையாமைக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவதாக இவ்வாறான நிவாரணங்கள் இருப்பதாக தெரியாமைதான் முதற்குறையாக காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. இப்படியே தெரிந்தாலும் இதனை ஏற்றுக்கொள்வதற்கு காணப்படுகின்ற நடபடி தேவைப்பாடுகளின் நிலமைகளும் இதனை ஏற்றக்கொள்வதை தடுத்து வருகின்றன. குறிப்பாக அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிராக ஒரு மாதத்திற்குள் உயர் நீதி மன்றத்தை நாட வேண்டிய கால எல்லையை இதற்கு நல்ல உதாரணமாக கூறலாம். இவற்றோடு பொருளாதார பின்னடைவுகளும் இந்நிவாரணங்களை பெற்றுக்கொள்ள இடையூராகவே இருக்கின்றது. இவை இப்படியிருக்க உரிமை மீறல்கள் இடம்பெற்றாலும் அதனைச் கருத்தில் கொள்கின்ற போக்கும் நிவாரணத்தை பெற்றுகொள்வதில் காணப்படுகின்ற அக்கறையின்மைகளும் கூட குறிப்பிடதக்க குறைபாடுகளாகவே கருதப்பட வேண்டியுள்ளது. இந்நிலைகள் நிவாரணங்கள் இருந்தும் அதன் முக்கியத்துவத்தை உணராத பிற்போக்கான நிலையே எடுத்து காட்டுகின்றது.

க. விநாயகமூர்த்தி LL.B (Col) AAL
சட்டத்தரணி – நுவரெலியா.

---

## தாய்

கருவறை தனிலே மாதம் பத்து
காத்து வளர்ப்பவள் தாய்! – ஒரு
வருமதி பார்த்து, சேவைகள் தன்னை
வழங்காதிருப்பவள் தாய்

உதிரம் தன்னை பாலாய் நாளும்
ஊட்டி வளர்ப்பவள் – தாய்
சதிரம் தனையும் சாராய் பிழிந்து
சேவையை வளர்ப்பவள் தாய்

சுமையாய் எதையும் என்னா நெரியாள்
சுயநலம் அரியாள் தாய் – தினம்
இமைகள் மூடா வகையில் விழித்திருந்து
வளர்ப்பவள் தாய்

காலில் எறும்பு கடித்தால் கூட
கண்டு துடிப்பவள் தாய்! – முள்
வேலி போலும் காவல் புரிந்து
விரும்பி வளர்ப்பவள் தாய்

மழலை மொழிகள் கேட்டுத் தினமும்
மகிழ்வு கொள்பவள் தாய் ! – உடல்
அழகு படுத்தி ஆடை உடுத்தி
அழகை இரசிப்பவள் தாய்

கல்வி புகட்டித் திறமைகள் கண்டு
களிப்பவள் தாய் ! – எமை
அல்லும் பகலும் அன்பாய் அனைத்து
ஆனந்தமாபவள் தாய்

ஹேமா திவ்யா
மா/றத்தோட்ட இந்து ம.வி
றத்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவு

இருள் காணும் இவ்வுலகு
இனிதே ஒளி காண வேண்டும்
ஒளி வந்து மீண்டும் - எம்
விழி திறக்க வேண்டும்.

சிதையுண்ட எம் வீடுகள்
சிலை போல் நின்றிட வேண்டும்
உயிர்நீத்த உணர்வுகள் - எம்
உறவாக மீண்டும் உருப்பெறவேண்டும்

உயிர் இழக்கும் யுத்தம்
உறவு இழந்து போக வேண்டும்
சந்தோசம் எனும் சொல் - எம்
செவி வர வேண்டும்

துப்பாக்கி எனும் கயவன்
தூரத்தே துயில் கொள்ள வேண்டும்
மரணம் எனும் ஓலம் - எம்
மனதிலிருந்து நீங்க வேண்டும்.

குண்டு எனும் வம்பனை
குழி தோண்டிப் போட வேண்டும்
உரிமை எனும் ஒன்று - எம்
உறவாக வேண்டும்

வேலை இல்லா பட்டதாரிகள்
வேலைதனை பெற வேண்டும்
விடிவு எனும் பொக்கிஷம் - எம்
வீடு வர வேண்டும்

P.தினேஷ் பிரியந்த்
பரி.சில்வஸ்டர் கல்லூரி
கண்டி


*WITH BEST COMPLIMENTS FROM:*

**R.Ratnasingam**
Tax Consultant

Office:
297/2, George r. De silva Mw,
Colombo-13
Tel: 2441111 Fax: 2331435
E-Mail:- east-wst@sltnet.lk

Res:
513, Ferguson Road,
Colombo- 15
Tel: 4614614

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes from.....

Sri Luckshimi's

Hard Ware

139, GALLE ROAD,
COLOMBO-04
TEL: 2591856

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes from.....



# Higher Education Centre

Commerce, Arts Unit
English
O/L Commerce
Computer Type Setting
Photo Copies

Liberty Building - Hatton
Tel: 051-2222922

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

**MADEENA'S TEXTILE**







**No.135, Main Street,**
**Maskeliya.**

**Tel:052-2277333**

*WITH BEST COMPLIMENTS*
*FROM:*

**SABARY**
JEWELLERY



INTRODUCERS OF ALL FASHIONABLE JEWELS

**No.137/11, Sea Street,**
**Colombo-11**

**TP:011-2391773**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# LANKA FOTO

PHOTOGRAPHERS

84,&,86, Bankshall Street,
COLOMBO- 11

Tel:2320401
2434987

---

Our Best Wishes

# Sri Rekaa

Jewellers

Guaranteed Sovereign Gold

5/S



5/S,SEA STREET JUNCTION,
COLOMBO 11.

TEL:01-2438665

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி தளிர் சிறப்புடன் மலர்ந்திட
வேலவனின் நல்லாசிகள்

# VELLAVAN STORES & GROCERY

**345, MAIN STREET,**
**MATALE**

குறிஞ்சி தளிர் சிறப்புடன் மலர்ந்திட
வாழ்த்துகள்

# பராசக்தி ஏஜென்சிஸ்

தமிழ், சிங்கள, ஆங்கில பாடசாலைப்புத்தகங்கள், பாடசாலை காரியாளய உபகரணங்கள்
வாழ்த்து மடல்கள், அச்சிக்கூடகடதாசி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளளாம்




இல:71-71/1 பிரதான வீதி.
பண்டாரவளை.
தொலைபேசி இல:057-2222370.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# LANKA FOTO
PHOTOGRAPHERS

84,&,86, Bankshall Street,
COLOMBO- 11

Tel:2320401
2434987

Our Best Wishes

# Sri Rekaa
Jewellers

Guaranteed Sovereign Gold 5/S



5/S,SEA STREET JUNCTION,
COLOMBO 11.

TEL:01-2438665

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி தளிர் சிறப்புடன் மலர்ந்திட
வேலவனின் நல்லாசிகள்

# VELLAVAN STORES & GROCERY

**345, MAIN STREET,**
**MATALE**

குறிஞ்சி தளிர் சிறப்புடன் மலர்ந்திட
வாழ்த்துகள்

# பராசக்தி ஏஜென்சிஸ்

தமிழ், சிங்கள, ஆங்கில பாடசாலைப்புத்தகங்கள், பாடசாலை காரியாளய உபகரணங்கள்,
வாழ்த்து மடல்கள், அச்சிக்கூடகடதாசி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளளாம்




இல:71-71/1 பிரதான வீதி.
பண்டாரவளை.
தொலைபேசி இல:057-2222370.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:



SJ

# SANTHI JEWELLERY

Gold Smith Tools & Gem Jewellery, 24ct Fine Gold


171/9, SEA STREET,
COLOMBO-11,
SRI LANKA.
TEL: 2332778
0777-186925



With best compliments from:

# RAMANEE

JEWELART



130, Sea Street,
Colombo-11.

Tel: 2422687


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments...

From : -

# Now Your choice Co. Ltd.

No.16/2 Queensbury Parade,
Queensbury Edgluiare
Middle east
HA8 5NR
London .U.K.

Tel. 02089057765
Fax. 02089057546

**Branch**

169 1/5 , International Building
2nd , Cross street Col. 11
Sri Lanka.

Tel: 011-2341534
Fax : 011-2454123

Dealers of Gem and Jewellery in Sri Lanka
&
Money Transfer and Currencies in United Kindom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

KELANI CABLES

# Kelani Cables Ltd

ISO 9001 Certified Company

P.O.Box 14, Wewelduwa Kelaniya, Sri Lanka

Tel: 2911224 Fax: 2910481 Mobile: 0777-583672

E-mail: info@kct.eureka/lk

## Distributor of Kelani Cables

Kandy Agents

M.D. Distributor

Tel: 0812-422828

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# RENUKAS

General Hardware Merchants &
Estate Suppliers
Dealers in Paints, PVC Fitting,
Electrical Goods

Tel: 051-2222612

No. 21, Dimbulla Rd,
Hatton

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from:-*

# Devi Jewellers

*Precious Expressions...*

Buyers & Sellers of Bullion
(Gold , Silver , Platinum & Palladium)
Diamonds , Gems & Cubic Zirconium

AUTHORISED MONEY CHARGER

CUSTOM MADE JEWELLERY

AUTHORISED MONEY CHARGER

CUSTOM MADE JEWELLERY

131, Sea Street
Colombo -11
Sri Lanka

Tel: 011-2432502 Fax : 2327101

E-Mail :- devi131@visual.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM:

Universal
PRINTERS & PUBLISHERS

# UNIVERSAL PRINTERS & PUBLISHERS

Offset, Letter Printers, Graphic Art Desining,
Computer Type Setting & Stationers.

Work Shop:
01, UPPER DUMBURUGIRI ROAD,
HATTON

Office:
26, CITY PLAZA COMPLEX,
HATTON

Tel: 051-2222911

WITH BEST COMPLIMENTS FROM:

BS

# BOBBY STORES


*Dealers in Fancy Goods, School Stationeries &
Ever silver etc.*

No.05, Dickoya Road,
Hatton.

Tel: 051-2222349

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Committee Members




**J.P.Wesley(Mgt)**
President




**V.Ranesh(Mgt)**
Secretary



**V.Palani Kumar(Mag)**
Treasurer




**G.Shatiyadharshini (Law)**
Editor




**A.Kugaraj(Mgt)**
Vice.President




**A.Priya(Mgt)**
Vice. Secretary



**B.Nirmaladevi (Mgt)**
Join -Treasurer



**S.Jeyanthan (Mgt)**
Co-odinator



**C.Ashok Kumar(Mgt)**
Committee Member

**T.Ketheesh (Sci)**
Co-odinator

**K.Karunanithi(Arts)**
Co-odinator

**R.Vijikumar(Mgt)**
Committee Member

**S.Sakirthamalar(Arts)**
Committee Member

**Priyadharshini(Sci)**
Committee Member




**K.Sasirekah(Law)**
Member

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Members

## Faculty of Management & Finance- Final Year



**M.Rameshkumar**



**V. Kavitha**



**P.Shoba**



**T.Puwanalogini**



**K.Punithawathy**



**S.Udeshini**

**S.Udesh Edwin**



**G.Salina Jeyamalar**

**K.Sivachandran**

**C.Pradeepan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Members


## Faculty of Management & Finance- 3rd Year

N.Sivakumar

R.Rajeshkumar

R.Ratheesan

M.Naleena



S.Pradeepan


P.Janani

V.Radika


S.Uma Gayathri

Dharmadeepa


## Faculty of Management & Finance- 2nd Year



V.Krishnaveni



T.Nishanthini




S.Maheswary



M.Thiyagarajah



S.Kalpana



T.Vinothini

D.Komathy Priya

V.Rajeshkanna

R.Ravikumar

S.Sivarajah

V.Suresh

T.Lishantha

Sathees

D.Kanaga Lechmy

M.Priyadharshini


M.Dulshi Anoya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Members

## Faculty of Management & Finance- 1st Year



**S.Sureshkumar**

## Faculty of Arts- Final Year

**Rajeshwary**

**Tharani**

**Deepamala**

**Rajkumar**

## Faculty of Law

**G.Pushpa Anjalin**

**Jaya Pragash**

**Gugajar**

## Faculty of Science

**Kohilavani**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குரிமை

ஆட்சி கலைக்கப்பட்டு
அனுமதி வந்ததும் வேட்பாளர்
புன்னகை முகங்களுடன்
புற்றீசலாய் உலா வருவார்
போகாத இடமெல்லாம்
புகுந்து வருவார்
பேச்செல்லாம் இனிப்பு
பெருமையான கை கூப்பு
போடும் இந்த வேஷம்
பெறுமதியான வாக்குரிமைக்கு

குடும்பத்தில் ஒருவராக
கும்பிடு போட்டிடுவார்
நல்லவரில் ஒருவராக
நம்பிக்கை ஊற்றிடுவார்
நாய் உண்டு என அஞ்சாமல்
நம்மிடம் வந்திடுவார்
வேஷசத்தில் மயக்கி
வேண்டும் வாக்குறுதிகளைக்
கொடுத்திடுவார்
தம் தேவை நிறைவு பெற தம்மை
நாயாக அலைய விடுவார்
நமது வாக்குரிமை ?
வாக்குரிமை பெற்றுவிட்டோம்
வந்தவர் சென்னார் நடுராத்திரி
அட்டைகளை நீட்டுங்கள்
ஓட்டையுள்ள ஜன்னலூடே
நமக்கு உதவி செய்கிறார்
நாம் நடக்க தேவையில்லை வாக்கு சாவடி
இது தான் ஜனநாயக கலாசாரம்

நாளை தான் தேர்தல்
நடுச் சாமத் தேர்வு
கொண்டு போனார் இளைஞர்களை
கொன்றுகுவித்த கோரமதை
மனதில் மறந்திடுவாரோ
மனங்களே சொல்லட்டும்
மாறிடுமா ஜனநாயக கலாசாரம்

பேச்சு சுதந்திரம் பத்திரிக்கை சுதந்திரம்
பெயரளவில் இல்லாமல்
வாக்குரிமை அட்டையுடன்
வேட்டுச் சத்தமின்றி
வேறொருவர் தடையின்றி
நல்லாட்சி நடம்புரிய
நமது வாக்கரிமை
என்றுபயன்படும்
எட்டிப்பார் நாளையை

வாக்குரிமையில்
சமாதானம் வேண்டும்
நாளைய இளைஞர் மனங்களில்

வாக்களிக்க அனுமதி அட்டை
வழங்கப்பட்டு விட்ட பின்
ஆளடையாள அட்டையுடன்
அனைவரும் வாக்கு சாவடிக்கு
அண்மிக்கும் தருணம்
அசத்திவிடும் ஜனநாயக கலாச்சாரம்

டி.அனுசியா
தரம் :- 12
மாத்தளை ரத்தொட்டை
இந்து மகா வித்தியாளயம்
இரத்தோட்டை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கற்றல் கற்பித்தலில் வேண்டப்படும் முன்னேற்றம்

கல்வி என்பது மிக சுயாதீனமாக பயன்படுத்துகின்ற சொல்லாகும். எனினும் இது கருத்து நிலை பொருளான எண்ணக்கருவாக அமைந்து இருக்கிறது. கல்வி எனப்படுவது யாது என வினவினால் அதற்காக பற்பல விடைகள் கிடைக்கப்பெறலாம். அவ் ஒவ்வொரு விடையையும் கவனத்தில் கொண்டு அப் பதத்தினால் கருதப்படுவது யாது என அறிவது பொருத்தமானதாகும். "கல்வி என்பது அறிவை பெற்றுக்கொள்வதாகும்" ஒரு தனியாள் அறிவை பெற்றுக்கொள்வதற்கான வெற்றிகரமான செய்தித்திறனாக "கற்றல் கற்பித்தல்" செயத் தொடர் காணப்படுகின்றது. இச்சிறப்பான செயற்தொடருக்கு ஆசிரியர், மாணவர் தொடர்புகள் மிக முக்கியமானவை. ஆகவே கற்றல் செயற்பாடு எனப்படுவது மாணவர் நிலையில் ஏற்படுத்தப்படும் செயலாகும். கற்பித்தல் எனப்படுவது ஆசிரியர் சார்பில் நடைபெறும் செயல் ஒழுங்காகும். மாணவன் என்பவன் ஆசிரியரின் அறிவுறுத்தல்களை உரியவாறு பின்பற்றுதல், நன்றாக கற்று கொள்ளுதல், சமூக ஒழுக்கங்களை பண்புடன் காத்தல், உரிய நல்லொழுக்கமுடன் நேரத்தை வீணாக்காமலும், நுட்பங்களையும், சாஸ்திரங்களையும், கற்றல் ஆகியவற்றை தமது பொறுப்புக்களாக மாணவர் ஏற்றுக்கொள்வார்.

"கற்றலும் கற்பித்தலும்" உள ரீதியான ஒரு செயற்பாட்டு தொடராகும். அப்படி செயற்பட்டால் மாணவர்களின் தன்மை, கற்றல் நடைபெறும் விதம் அதன் செயற்பாட்டிற்காக ஆதார படையாக அமையும் உளபாங்கு என்பன தொடர்பான தெளிவான விளக்கத்தை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும். மாணவர் என்பவர் களிமண்ணாகவும் அவரை ஆசிரியர் கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் மிகச்சிறந்த பொருளாகவும் மாற்றியமைக்கலாம் என்று கூறப்படுகின்றது. ஆனால் இவ்வரைவிலக்கணம் மறுதலிக்கப்பட்டது. இதன் மூலம் மாணவர் என்பவர் ஆசிரியர் எனும் அறிவு தொகுதியின் மூலம் வெற்று பாத்திரங்களான மாணவர்கள் நிரப்பப்பட வேண்டியவர்கள் என்பது மறுத்தே கூறப்பட்டது. உண்மையில் மாணவர்கள் ஏற்றப்பட வேண்டிய தீபங்கள் ஆவர்.

ஆசிரியர் என்பவர் நமது முதாதையர் நமக்கு விட்டுச்சென்ற மொழி, பண்பாடு, கலை, கலாசாரம், விழுமியங்கள், இலக்கியங்கள் என்னும் முதிசங்களை இன்னொரு சந்ததிக்கு கற்பித்தல் எனும் செயற்பாட்டினுடாகக் கடந்து போகின்றன. இச்செயற்பாட்டை அறிவு, திறன், மனப்பாங்கு என்னும் மூன்று அடிப்படை நோக்கங்கள் மூலம் மாணவர்களை கற்றல் நடவடிக்கைகளில் ஈடுப்படுத்துகின்றனர். எனவே அன்மைக்காலமாக கற்றல், கற்பித்தல் எனும் செயற்பாடுகள் வகுப்பறையை விட்டு வெளியிலும் பரந்து செல்பவையாக காணப்படுகின்றன. எனவே அதற்கேற்றவாறு திட்டமிடுகின்ற பொறுப்பு ஆசிரியரை சார்ந்ததாகும். "கற்றல் கற்பித்தல்"எனும் செயல் ஒழுங்குகளுக்கு மாணவர் மையக்கல்வியே மிகச்சிறந்ததாகும். அதாவது கற்க ஆயத்தமாகும் மாணவர்களு க்கு உடல்,உல வேறுபாடுகள் உண்டு என்பதையும் ஒவ்வொரு மாணவனிற்கும் கற்க முடியும் என்பதையும் ஆசிரியர் கருத்திற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு ஒப்ப மாணவரின் தேவைகளையும், திறமைகளையும் அறிந்து அவர்களின் கற்கும் வேகத்திற்குகேற்ப கற்றல் வாய்ப்புக்களை திட்டமிடல் ஆசிரியர்களின் கடமையாகும். மாணவரின் ஆராயும் தன்மையை மழுங்கடிக்காமல் அவர்கள் சிந்தித்து செயலாற்ற வாய்ப்பளிப்பது கற்பிக்கும் பொழுது மாணவரின் "கற்றல், கற்பித்தல்" செயற்பாட்டில் முக்கியம் பெறுகிறது. ஆசிரியர் சரியான பாதையை காட்டுவதற்காக மட்டும் செயற்படுவர். இதன் மூலம் "கற்றல், கற்பித்தல்" முன்னேற்றம் அடைவதுடன் கற்பிக்கப்படும் விடயங்களுக்கு ஊடாக மாணவர்களை பற்றிய மனித நேய கண்னோட்டத்துடன் விடயங்களை கருதும் பண்பு முதலிடம் பெறுகிறது.

"கற்றல், கற்பித்தல்" செயற்பாட்டின் மூலம் மாணவர் யாதாயினும் ஒரு சமூகத்தில் அங்கத்தினராக செயற்பட தேவையான பல்வேறு திறன்கள் மேன்மைப்படுத்தப்பட வேண்டும். அவையாவன பொறுமை, மாற்றார் கருத்தை மதித்தல், தலைமைதுவத்தை ஏற்றல், தலைமையை மதித்தல், புதிய நிலமைக்கு ஏற்றாற் போல் இசைவாதல், குழுவின் முன் அடியெடுப்பு, குழுவை வெற்றியடைய செய்தல் எனும் சமூக மைய திறன்கள் மேன்மைப்படுத்தப்பட வேண்டும். "கற்றல், கற்பித்தல்" செயற்பாட்டின் போது பாரம்பரியமாக பின்பற்றப்படும் அறிவு, திறன், மனபாங்கு என்பவற்றிலே தங்கியிருக்காது கல்வியாளர் புளூம்(Bloom) என்பவரின் கோட்பாட்டின் படி அறுதலாட்சியில் அறிவு, கிரகித்தல்,பிரயோகம், பகுத்தல், தொகுத்தல், மதிப்பீடு என்னும் விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். "கற்றல், கற்பித்தலின்" போது இச்செயல் ஒழுங்கை மேம்படுத்துவதற்கு மாணவர் கற்கும் பாடம் தொடர்ச்சியாக ஒரு கால இடைவெளிக்குள் அவர்களால் சுய விருப்பத்துடன் பெற்று கொண்ட மனங்கவர் விடயங்கள், அவர்களின் ஆக்கங்கள், சித்திரங்கள், செய்திதாள் கடிதங்கள் என்பன போன்றவை சுய விருப்பத்தில் அவன் தாம் விரும்பும் தன் மனம் கவர்ந்த பல்வேறு விடயங்கள் அதற்குள் திரட்டப்பட்டிருப்பது அதன் சிறப்புப்பண்பாகும். "கற்றல், கற்பித்தல்: செயற்பாட்டை அபிவிருத்தி செய்வதின் மூலம் மாணவர்களிடையே சமநிலை ஆளுமை தொடர்பான விடயங்கள் அறுதல்லாட்சி திறன் மனவெழுச்சி, பண்புகள், உளவியக்க திறன்கள், சமூகத்திறன்கள், கற்றலோடு தொடர்புபட்ட ஆளுமைப்பண்புகள் என்பன மேம்படுத்தப்பட வேண்டும்.

தனிமாணவரின் கற்றல் செயற்பாட்டின் போது அவனது கற்றல் அறிவு மட்டம், ஊக்கம், மீள்திறன், மெல்ல கற்கும் பண்பு, நெறிபிறழ்வு, அடைய வேண்டிய அளவு, உடலியல் வேறுபாடுகள், அனுகுதிறன், கற்கும் ஆற்றல் அல்லது இயலான்மை, சமூக பொருளாதார பின்னணி என்பன மிக சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்த கூடியது. "கற்றல் கற்பித்தல்" செயற்பாட்டு ஒழுங்குகள் முன்னேற்றப்படுத்துவதற்கு மேலே கூறப்பட்ட விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். அத்துடன் ஒரே வகுப்பறையில் நிதமும் ஆற்றப்பட வேண்டிய "கற்றல், கற்பித்தல், மதிப்பீடு" எனும் மூன்று செயற்பாடுகளுமாகும். மாணவர்கள் கற்றல் செயல் ஒழுங்கை முன்னேற்றுவதற்கு கற்பித்தல் செயற்பாட்டை விருத்தி செய்து அவற்றை வினைத்திறன் மிக்கதாக விருத்தி செய்வதும் மிகமிக இன்றியமையாத ஒரு செயற்பாடாகும்.

அதிரன் அந்தோனி கோமஸ்,
தரம் 12 (கலைபிரிவு)
குயில்வத்தை த.மா.வி
றொசல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வா(ழ்)ல்வு அறுந்த இருதயமும்
## கூன் விழுந்த முதுகெலும்பும்

லங்கையின் இருதயம்
மத்திய மலைநாடாம்
இந்நாட்டின் முதுகெலும்பு
மலையக தொழிலாளியாம்
ஏனெனில் தேயிலை இறப்பரென்று
தேசிய வருமானத்தை
தேறவைத்தது மலைநாடாம்
தேசிய இலங்கையின்
நாடிநாளங்கெல்லாம்
ஓடிக்கொண்டிருப்பது
மலையகத்தானின் வளமான
இரத்தமாம்
அதுமட்டுமா?
தேசத்தின் மின்சாரத்துக்கும்
தேசிய குடிநீருக்கும்
மலைநாட்டு அணைக்கட்டுகள்தான்
நிரம்ப வேண்டுமாம்
இறப்பரின் தரத்திலும்
இரசமான தேனீரிலும்
மலையகத்தானின் வியர்வைதான்
இரண்டற கலக்குதாம்
அதனாலேதான்
இலங்கையின் இருதயம்
மத்திய மலைநாடாம்
இந்நாட்டின் முதுகெலும்பு
மலையக தொழியலாளியாம்
என்றெல்லாம்
மேடைகள் பல போட்டு
மணிக்கணக்காய் மீட்டிங்வைத்து
மார்தட்டிப்பேசிடுவர்
எங்கள் தங்கத்தலைவர்கள்...

ஆனால்
வா(ழ்)ல்வு அறுந்துபோண
இருதயவறைகளாய்த்தான் இன்னும்
மலைநாட்டுத் தோட்டங்கள்
மங்கிஇருக்கின்றன..
கூன்விழுந்து குறுகிப்போண
முதுகெலும்புகளாய் தான்
மலையகத்தொழிலாளிகள்
முடங்கிஇருக்கின்றனர்.
நூற்றாண்டுப் பழமையான
அவனிருக்கும் லயன் காம்பிறாக்களில்
கரிபிடித்த லாம்புகள்தான் இன்னும்
புகை கக்கிக்கொண்டிருக்கின்றன.

நல்லுசாமி ஜெப்பிரகாஸ்
இரண்டாம் வருடம்,
சட்டபீடம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியலின் கீதம்

வாழ்க்கை எனும் நாடகத்தில்
வலுவில்லா மேடையினால்
ஏழையிவனின் நடனம்
சுரதி •சேரா ராகங்களாகிப் போனது
தேயிலை தோட்டத்தில் - பசி
தீர்க்கும் எண்ணத்தினால்
உழைத்துக் களைத்து
தந்தியறுந்த வீணையினை -போல
தள்ளாத வயதிலும்
பொல்லாத விதியால்
செத்துப் பிழைக்கும்
இவன் சந்ததிக்கு
சலங்கையின் சங்கீதங்களோடு
சந்தோஷக் கணைகள்
என்றைக்குத்தான் - இருளை
துளைத்து விடிவை
வரவழைக்கப் போகிறதோ
தெரியவில்லை ?..........


S.சுப்பிரமணியம் சுகாஷினா
கலைப்பிரிவு
நு/ பரிசுத்தத திரித்துவ கல்லூரி மத்திய கல்லூரி
நுவரெலியா.



WITH BEST COMPLIMENTS FROM:

ARUJUNA
JEWELLERS
Pioneer jewellers in Hatton

- PAWN BROKING
- SPORTS CUPS
- MONEY EXCHANGE
- CANON



40B, Main Street,
Hatton

Tel: 051-2222353
Www.srilankayellowpages.com//arujun
E-mail:jeyhat@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

**Maria JEWELLERS**








126-128, SEA STREET
COLOMBO-11
TEL: 2434435

With best compliments
from:

**Bobby** JEWELLERS

ORDERS EXECUTED PROMPTLY
DEALERS IN 22 KT JEWELLERY



159, SEA STREET,
COLOMBO - 11.

T.P : 2449682
2458930
FAX : 2458931

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WITH BEST COMPLIMENTS FROM:**



# AZRA SHOE PALACE

**No: 57,**
**Main Street,**
**Rattota**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With best compliments from:**

# Vijaya Textiles

"Pawn Brokers"

Dealers In Textiles,
Fancy Goods and Bata, DSI Footwear etc..

No. 63, Ragala Bazaar,
Halgranoya.

Tel: 052-2265220
Fax: 052-2265520

**With best compliments from:**

# *New* Siva *Trading Co.*

ஏண்ணெய்வகை, கால்நடை உணவு
ஆகியவற்றின் விநியோகஸ்தர்.

இல. 89 ஆட்டுபட்டி தெரு
கொழும்பு 13.

**தொலைபேசி: 2470639**
**4615541**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with best compliments from:

# INDRA JEWEL AND TEXTILES

**No.133 Main Street,**
**Bogawantalawa.**
**Tel: 052-2267812**

Branches

**INDRA STORES**
135, Main Street,
Bogawantalawa.
Tel: 052-2267636

**INDRA JEWELLERS,**
No:05 Colombo Street,
Balangoda.
Tel:045-2287247



**INDRA PAWN BROKERS,**
Bogawantalawa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our Best Wishes*

# METRO METALS

Importe & General Hardware Merehants

Tel : 2440956, 2440954

Fax : 2433523

37,Quarry Road,
Colombo 12.

---

*Our Best Wishes*

# RATTOTA GOLD HOUSE

Manufactures, Designers, Retailers of Genuine 22 kt
Jewellery with a wide of selection

No. 36, Main Street,
Rattota.
Tel: 066-2255217



**BRANCH**

**SOORIYA JEWELLERS**

14, Main Street,
Rattota.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With best compliments from:**

# LCS

Loyal Computer Systems

Registered Computer Training Centre
Reg No. P11-00196



The Best Computer Education for,

School Leavers
Job Seekers
School Teachers & Students
Kids



**We are ready to Challenge the -IT-Fields**

# Loyal Academy



Advanced level Classes
Ordinary Level Classes
Spoken English




**217, Dimbulla Road,**
**Hatton.**

Tel: 051-2223575


E-Mail: loyalcs@lycos.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*



om



# OM ENTERPRISE

All Food Items

Buy And Try

No. 137, Maliban street,
Colombo-11.
T.P: 011 2320281

---

**WITH BEST COMPLIMENTS FROM:**

# Hilton Textiles (pvt) Ltd.

**Importers Of All Kinds Of textiles, Ready made Garments, Accessories &fancy Good**



**Office:**
**200/1/2E, KEYZER STREET,**
**COLOMBO-11,**



**T.P : 011-2336922**
**Fax : 011-2423438**
**Direct No: 011-2541691**



**T'Grame: HILTEXCO**
**E-mail: hiltontx@slt.net**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

# METRO ELECTRICALS

29, Main Street,
Hatton
**Tel: 052-2222591**

## METRO PAINT COMPANY

14, Side street, Hatton.
Tel: 051-2222591

Dealers in all kinds of House hold paints & Spray paints

## விழிப்புணர்வு

இன்று முடிந்தால் தானே - நாளை !
விடிந்த பொழுதுகள்
விழிக்காமலே சென்றுவிட
எங்கிருந்து வரும் - விழிப்பணர்வு
நாளைய நிஜங்களை பற்றி
சிந்திக்க கூட - இவன்
சிந்தையில் சிரத்தையில்லை
என்கின்ற போது
எங்கிருந்து வரும் - விழிப்புணர்வு
இது ஒரு புறம் இருக்க
இதற்காக நீ விழிக்க
மறுப்பதும் நல்லதல்ல
இன்று முடிவதும் - நாளை
தொடர்வதும் - உன் வாழ்வின்
விடிவாக வேண்டும் - என்பதை
நீயுணர்ந்து
விடிந்த பொழுதுகளை
விழிக்கச் செய்
அப்போதுதான் - உன்
சிந்தையில் தோன்றும் விழிப்புணர்வு.

S.சுப்பிரமணியம் சுகாஷினா
கலைப்பிரிவு
நு/ பரிசுத்தத திரித்துவ கல்லூரி மத்திய கல்லூரி
நுவரெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


BEST WISHES FROM:-



*New*

*Rathna Mahal*

JEWELLERS (PVT) LTD



*"We Create the Jewellery*
*You Create the Impression"*

**97, SEA STREET,**
**COLOMBO-11.**
**011-2431357**

**155, MAIN STREET,**
**NEGOMBO**
**031-2231854**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM:



# MARIE STORES
# &
# P.M.M.TRANSPORTERS

Whole Sale, Retail & Estate Suppliers

No: 52, 4th Street, Maskeliya

Tel/Fax : 052-2277452 Mobile - 0777-789325

E-mail: mpuvaneshwaran@yahoo.com.in

WITH BEST COMPLIMENTS FROM:

# JAYALANKA TRADERS

IMPORTERS,EXPORTERS,WHOLESALE & RETAIL DEALERS
IN ALL SRI LANKA PRODUCE GENERAL MERCHANTS
& COMMISSION AGENTS.

No 104/2, Dam Street,
Colombo-12.
Sri lanka.

T. P : 011- 2438553, 011- 2458559

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவு

பூகம்பம் புயலிலே
தொலைந்து போன உறவுகளை
தேடுகிறேன்..........? மீட்டுத் தருவாயா?
அன்றி என்னை தவிக்க விடுவாயோ ?
ஏழையிவள் ஏங்குகிறேன்!
பள்ளி பருவ இளமையை சுமந்து
பாடித்திருந்த நான்
பாவங்கள் செய்து விட்டேனோ?
பார்பாரற்று பரிதவிக்கிறேன்
பாவம் என்றிரங்க- இறைவா
நீ நினைக்கவில்லையோ?
பசுமையான பறவைக் கூட்டம்
எங்கே.............?

சோகங்கள் மறைந்த சிறார்கள் எங்கே?
நிம்மதியற்றுத் தவிக்கிறேன்
துடுப்பில்லா படகாய் கரையை
தேடிடும் விழிகள்
தொலைந்து போனது என் முகவரி
திசைமாறிய பறவையாய் திக்கற்று
தவிக்கிறேன் தினமும் நான்........
எனக்கோர் விடிவு பிறக்காதோ
ஏழையிவள் ஏங்குகிறேன்?
நொடிப் பொழுதில் வந்து
எங்கள் தலையெழுத்தையே
மாற்றியமைத்த
பூகம்பமே ! எங்கள் வாழ்கையை
பசுமையாக்க உன்னால் முடியுமா?
தெய்வாதீனமாக உயிர் பிழைத்த
எங்களுக்கு விடிவு காலம் பிறக்காதோ?

வ.நிர்மலா
பது / சரஸ்வதி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகச்சமூகமும் இளைஞர்களும்

ஒரு நாட்டில் அபிவிருத்தி என்பது பிரதானமாக இளைஞர்களின் கையிலேயே தங்கியுள்ளது. இவ்வகையில் ஓர் சமூகமும் இதற்கு விதிவிலக்கல்லவே. மலையகச் சமூகம் இன்று வெறுமனே இளைஞர்களின் கையில் தங்கியுள்ளது என்பதனை விட கற்ற இளந்தலைமுறையின் கையில் உள்ளது என்பது சாலம் பொருந்தும். இவ்வண்ணம் முதலாவதாக சமூக அபிவிருத்தி என்ற பதத்தின் பொருளை ஐயம் தெளிவோம் சமூக அபிவிருத்தி என்றால் கல்வி, தொடர்பாடல், பழக்கவழக்கங்கள் பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் உயர் நிலையில் இருப்பதே சமூக அபிவிருத்தியாகும்.

இந்த வகையில் மலையக சமூக அபிவிருத்தியை நோக்குவோமானால் ஆரம்ப காலங்களில் பெற்றோர்கள் வேலை செய்யப்போகும் போது தங்கள் குழந்தைகளை அங்குள்ள தோட்டத்திலே மடம் ஒன்றில் விட்டுச்செல்வார்கள் அவ்வாறு விட்டுச்சென்ற குழந்தைகளை ஒரு பெரியவர் நின்று கண்காணிப்பார் அந்நேரத்தில் குழந்தைகளுக்கு அறிவுக்கதைகளை கூறி அவர்களின் சிந்தனைக்கு சிறிதளவாவது இடம் கொடுப்பார். இவ்வாறாகவே மலையக குழந்தைகளின் கல்வி ஆரம்பித்தது. ஆனால் படிப்படியாக மலையகத்தில் கல்வியும் வளர்ச்சியடைத் தொடங்கிற்று. தோட்டத்தொழிலிலேயே ஊரிக்கொண்டிருக்காமல் இளஞ்சமுதாயத் தினர் படித்து வெவ்வேறு தொழில்கள் செய்ய ஆரம்பித்தனர். உதாரணமாக சொந்தக்கடைகள் வைத்து வியாபாரம் செய்தனர். ஆசிரியர் தொழில் செய்தனர். இன்னும் பல துறைகளில் தொழில் புரிந்தனர்.

மலையக மக்கள் கல்வியென்பது எமக்கு எட்டாக்கனி அது வெறும் கனவு என்று நினைத்திருந்த போது கனவை நனவாக்க எழுந்த விடிவெள்ளியாகவே கல்வியியற் கல்லூரிகளை வர்ணணை செய்யலாம். தற்பொழுது மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு நிறைய வசதிகள் அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது. ஆனாலும் மலையக மக்கள் கல்வியில் முழுமையாக வளர்ச்சி கண்டுள்ளனர் என்று கூற முடியாது கல்வி கற்பதற்கான வசதிகள் இருந்த போதிலும் கல்வியில் ஆர்வம் காட்டுவதில் இளைஞர்கள் பின்னிற்கின்றனர். தங்கள் கல்வியை அறையும் குறையுமாக நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்று விடுகின்றனர். இதனால் இவர்களுக்கு போதியளவு கல்வியறிவு இல்லாததின் காரணமாக சிறு வயதிலேயே திருமணம் செய்துக்கொள்கின்றனர். அது மட்டுமன்றி போதைப்பொருளுக்கு அடிமையாகி தங்கள் வாழ்க்கையை அழித்துக்கொள்கின்றனர். இதனால் மலையக சமூகம் சீரழிவுக்கு உள்ளாகின்றது.

மலையக இளைஞர்கள் தங்கள் நாகரீகத்தை நோக்கிச்செல்லவேண்டும் என்று எண்ணினாலும் கூட அதற்கான முயற்சிகள் அவர்களிடத்தில் குறைவாகவே காணப்படுகின்றன. என்று கூறலாம் இளைஞர்கள் மத்தியில் தாங்கள் ஏழைகளாகவும் தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகளாகவும் பிறந்து விட்டோமே என்ற தாழ்வு மனப்பான்மை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட தொழிலாளிகளாகிய மலையக மக்களே இந்நாட்டின் முதுகெலும்பு என்பதை இவர்கள் இன்னும் நன்றாக உணரவில்லை மலையக மக்களே இந்நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும்பங்கினை வகிக்கின்றனர் என்பதையும், விவசாயிகள் சேற்றில் கால் வைக்கா விட்டால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது என்பதைப்போல மலையக மக்கள் தேயிலைக்கொழுந்தில் கை வைக்காவிட்டால் நாம் அபிவிருத்தி பாதையை நோக்கிச் செல்ல முடியாது என்பதையும் உணரவேண்டும்.

நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெழும்பாக விளங்கும் இவர்கள் இவர்களின் சமூக வளர்ச்சிக்கும் இவர்களே முதுகெலும்பாக விளங்க வேண்டும். மலையக இளைஞர்கள் தங்கள் உரிமைகளை பாதுகாப்பதற்காக எழுச்சிக்கொண்டு அரசாங்கத்திடம் கோரிக்கைகளை விடுத்தனர். அவர்களின் கோரிக்கைகளில் சில அரசாங்கத்தினால் நியைவேற்றப்பட்டாலும் அவ்வுரிமைகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்தத் தெரியவில்லை உதாரணமாக தேர்தல் காலங்களில் மலையக மக்கள் சுயமாக சிந்தித்து தங்களுக்கு நல்லதைச் செய்யும் வேற்பாளர்களை தெரிவுசெய்து வாக்களிக்காமல் காசுக்காகவும் போதைப்பொருளுக்காகவும் தவறான ஒரு வேற்பாளருக்கு தங்கள் வாக்குகளை விற்கின்றனர். இது மட்டுமன்றி வேற்பாளருடைய அடியாட்களின் மிரட்டல்களுக்குப் பயந்து வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்காமல் இளைஞர்கள் கூட தங்கள் வாக்குகளை விட்டுக்கொடுக்கின்றனர். இதனால் இவர்களின் உரிமைகளை இழப்பது மட்டுமன்றி அடிமைச் சமுதாயமாகவே வாழ்கின்றனர். இவ்வாறான காரணங்களை நாம் எடுத்து நோக்குகின்றபோது இலங்கையில் மற்றைய பகுதியில் வாழும் சமுதாயத்தினரை விட மலையக சமுதாயம் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

மலையக சமூகம் அபிவிருத்தியை அடைவதற்கு இதை விட இன்னும் இளைஞர்கள் தங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும். தங்கள் கல்வி வளர்ச்சியில் முயற்சி எடுத்துச்கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு காரணமாக அமைவது கல்வியாகும். கல்வியே அவனை சமூகத்தில் உயர்ந்த இடத்தில் நிறுத்தும். இதற்கு சான்றாக

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கி
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்
மன்னனுக்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை
கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்ற பெரியவர்களின் கூற்றை எடுத்துகாட்டாக கூறலாம். மற்றும் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை ஒழுங்கான முறையில் நடத்தி செல்ல "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" எனும் கூற்றுக்கமைய நடக்க வேண்டும். தனக்கு மட்டும் என்று எண்ணாமல் தன் சமூதாயத்திற்கு, தமது சந்ததியினருக்கு என எண்ணி தனது சமூக வளர்ச்சிக்கு இளைஞர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இளைஞர்கள் போதைபொருட்களுக்கு அடிமையாவதை இயன்றளவு குறைத்து திடகாத்திரமானவர்களாக தமது பங்களிப்பை நல்க வேண்டும். அபிவிருத்தி என்பது சுகாதாரத்தையும் உள்ளடக்கி காணப்படுகின்றது. இது மட்டுமன்றி உள்ளத்தில் உறுதியும் உடம்பில் பலமும் கொண்டவர்களாக இருந்தால்தான் எதையும் சாதிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களைவிட மலையக சமூகம் இளைஞர்களின் பங்களிப்பு காரணமாக அபிவிருத்தி கண்டுள்ளது. எனினும் மற்றைய பகுதியில் வாழும் சமூகத்துடன் ஒப்பீடுகையில் இவ் அபிவிருத்தி போதாதாகவே காணப்படுகின்றது. ஆகையால் மலையக இளைஞர்கள் மேல்குறிப்பிட்டபட்டுள்ளவாறு தமது பங்களிப்புகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டார்கள் எனின் இன்னும் சில வருடங்களின் பின் மலையக சமூகம் ஓர் உயர்ந்த நிலையில் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ம.பிரசாந்தி
ஸ்ரீ முத்துமாரியம்மன் த.ம.வி
கம்பளை

---

## ஒருவரிக்கவிதை

**தாய்**
படைத்தவனே பணியும் பண்புள்ளம்
**அழகு**
விழியும் மனமும் சொல்லும் விமர்சனம்
**நட்பு (ஆண்-பெண்)**
உலகம் இன்னும் ஒத்துக்கொள்ளாத உயர்ந்த உறவு
**மலர்**
பெண்ணின் மௌனம்
**நிலவு**
கவிஞர் விட்டுவைக்காத இயற்கை அழகு
**வெட்கம்**
மனம், இடம் மாறும் வதனத்தில் சில நிமிடம்
**கணனி**
நவீன உலகின் புதிய பிரம்மன்
**பெண்**
என்றுமே விடைகாணாத வினாக்கொத்து
**மழலை**
உலகமே ஏற்றுக்கொண்ட மொழி
**புன்சிரிப்பு**
ஆதரங்கள் திறப்பில் சிதரிய வெள்ளி முத்துக்கள்
**தென்றல்**
பூவின் காதலன்.

A.பிரியா
2ம் வருடம்
முகாமைத்துவ நீதிப்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

V.S Vinojas

Dealers in textiles & Indian Saree's

188/3F, 1st Floor,
"Aslams Trade Centre",
Keyzer Street,
Colombo-11.

Tel:-011-2432963, 2424819

BEST WISHES FROM:-

APSARAS TEXTILES

Specialist in wedding Sarees

Aslam Trade Centre,
# 188/6B, 2nd Floor,
Keyzer Street,
Colombo-11.

Tel: 011-2458833
Mobile: 0777-417089

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

SCA

## SCHOLAR'S ACADEMY

**45, Devisipura,**
**Talawakelle.**

G.C.E. A/L

G.C.E. O/L

★ ★ ★ ★ ★ ★ ★ ★

**உயர்ச்சி வெளியில் இல்லை**
**உன்னுள்ளேயே மறைந்து கிடக்கிறது**
**முயற்ச்சித்துபார்**

BEST WISHES FROM:-

# LATHA STUDIO

*Fifteen Years Of Valuable Service*

No. 50, Main Street,
Rattota.
Tel./Fax: 066-2255242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM:




# NEW VIVEK HOTEL

*Indian & Chinese Foods, Short Eats*
*Available Here.*
(ORDER UNDERTAKEN)



No:109, Main Street,
Maskeliya
Tel:-0722-558960

**NEW ADAMS PEACK HOTEL**
No.122, Post Office Road,
Maskeliya



WITH BEST COMPLIMENTS
FROM:

# SHRI DURGA PRINTERS


LETTER PRESS & OFFSET PRINTING

**No.122, Main Street,**
**Maskeliya.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments
from:

**VICTORY**
ELECTRICALS








**No : 106 1/1 (J) First Cross Street,**
**Colombo 11.**
Tel : 011- 2388915

---

with best compliments
from:



# T. AMIRTHALINGAM

No. 325, Old moor Street,
Colombo 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

# Karthiga

## JEWELLERY

Dealers in Genuine 22kt Gold Jewelry
& Pawn Broking



83A, MAIN STREET,
HATTON.

TEL:051-222270

*WITH BEST COMPLIMENTS FROM:*

# MURALI COMMUNICATIONS

Local & I.D.D. Telephone Calls
Laminating
Paper Merchants

School Text Books
Office & School Stationariness
Photo Copying



Book Binding

Telephone : 051-2222041
051-2222042
Fax Mail: 051-2222041

**18/5 Dunbar Road,
Hatton**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our Best Wishes*

# J S R
## Trading Co. (Pvt) Ltd.

**Importers and Dealers of all Kinds of Vehicles and Machinaries.**

**No. 187/38A, Jayasamagi Mw,**
**Kalubovila,**
**Dehiwala**

Tel: 011-2764510

Hotline: 0777-513467

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Best wishes

# BEE BEE FANCY MAHAL

DEALERS IN FANCY GOODS & GIFT ITAMS

No. 46 , Armour Street,
Colombo 12.

Best wishes



# AMMAN TAX & FANCY GOODS

No . 24 ,Post Office Road
Maskeliya.
Tel : 052- 2277021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் என்பவள்..........

நிலையற்ற நிஜமற்ற - உலகில்
நிகரற்ற நிலைபெற்ற - உயிர்

நிஜங்களின் நிழல்களில்
நியாய மறைவுகளில்
நிம்மதியின் அழிவுகளில்
நிர்கதியின் இருள்களில்
நிற்கின்ற பயிர் !

உயிரை ஊனாக்கி
உடலை மெழுகாக்கி
உணவை சிறிதாக்கி
உளத்தை இளதாக்கி
உதிரத்தை பாலாக்கி
உருவாக்கும் கருவுக்கு
உள்ளன்பை பரிசாக்கும்
உலகின் நிகரற்ற தெய்வம் !

தான்பெற்ற துன்பங்களிலும்
தாலிபெற்ற வரங்களிலும்
தனக்கென தனி சொத்தாய்
தரணியில் பிறக்க முத்தாய்
தன்னுடல் அர்ப்பணப்பூவாய்
தந்திட்ட தர்மத்தடாகம் !

தாயகத்தின் தடங்களில்
தன்நெஞ்சின் மையத்தில் !
தன்னுயிர்க்கரைகளில்
தன்மையின் சுமைகளில்
தன் வயிற்று ஜீவனின்
தளிர் உதைப்புச் சுகங்களில்
தாலாட்டும் சுரம்பாடும்
தார்மீக வீணை!

புருகிட்டபாலுக்கும், பெற்றிட்ட அன்பிற்கும் - இங்கே
கடன் தீர்ப்போர் யாரோ? அதனை
சுமையாய் நினைப்போன் யாரோ?
அவள் கடைசிப் பயணத்தில் கண்கலங்கி நிற்போர் யாரோ?
தாயின் ஆத்மா சாந்திக்காய் தன் ஆத்துமாவை அளிப்போர் யாரோ?

R. மகேஷ்வரி
தரம் 12
குயில்வத்தை த.வி
றொசல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக சமூக அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்களிப்பு

மலையகத்தின் விம்மல்களை அகத்தினுள் போராட்டத்தின் உச்சியில் மறைக்கப்பட்ட பல கவலைகள், கஷ்டங்கள் நீங்க தோண்டி எடுக்கப்பட்டு தூசு தட்டப்பட்டு சோகங்களைத் துடைத்தெரிய துவண்ட உள்ளங்களின் மத்தியில் உதித்து எழுந்த வீரவெளிச்சங்களாக திகழ்கின்றவர்களே மலையக இளைஞர்கள் தான் பிறந்த தாய் மண்ணின் பெருமையை உயர்த்தவும் சாதிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தைக் கொண்டும் உதித்து எழுந்தனர். இவ்வாறான மலையக இளைஞர்கள் இலக்கியம், கலை, சங்கமமைத்தல் போன்றவற்றின் மூலம் மலையக சமுதாயத்தை அபிவிருத்தியடையச்செய்ய எண்ணியதன் விளைவாக எம் தாய் மண்ணில் தோன்றிய இலக்கியங்களை முதலாவதாக நோக்குவோம்.

"இலக்கியம்" என்பது நாட்டுக்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுப்பட்ட தன்மைகளையும், பண்புகளையும் கொண்டிருக்கின்றது. இலக்கியமானது ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார தன்மைக்கேற்ப மாறுபட்டிருக்கும். அந்த வகையில் எமது நாட்டை எடுத்துக் கொண்டால் வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என பல பிரிவுகளில் வாழும் மக்களிடையே வெவ்வேறு வகையான இலக்கியப் பண்புகள் காணப்படுகின்றன. மலையகத்தில் இலக்கிய செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன? மலையகத்தில் இளைய இலக்கியவாதிகள் என்ன செய்கின்றார்கள்? என்பதனை நோக்குவோமானால், வாய்வழியாக வந்த இராமாயணம், மகா பாரதக் கதைகள், நாட்டுப்புறப்பாட்டு, பொன்னர் சங்கர் போன்றவற்றை மற்றவர்களுக்கு கூறியும் ஆடியும் மகிழ்ந்தார்கள். ஆனால் காலவெள்ளத்தில் மலையகத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது இலக்கியத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டது. ஊமையாகவே வாழ்ந்து ஒதுங்கி நின்ற மலையக இளைஞர்கள் உயர்வை நோக்கி முன்னேறிச்செல்வோம் என்று எதிர்கால இலங்கையில் காலடி எடுத்து வைத்துள்ளனர். மலையக இளைஞர்கள் மேலும் ஓர் புதிய விடயத்தில் காலடி எடுத்துவைத்துள்ளனர். ஆம் "கலை" என்னும் வாழ்வை நோக்கி முன்னேற்றமடைந்துள்ளனர்.

வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணமும் நாம் பிறந்த மண்ணிற்கும் பெருமை சேர்த்துத்தரும் மனதோடு கலையிலும் தம் நாட்டத்தைச் செலுத்த ஆரம்பித்தனர். இதனடிப்படையில் தெருக்கூத்துக்கள் மேடை நாடகங்கள், சமூக நாடகங்கள், இலக்கிய நடனங்கள், நாட்டுக்கூத்துக்கள் போன்ற கலைகள் அவ்விளைஞர்களின் வாழ்வில் தூண்டுதலாக காணப்படுகின்றன. தாய்மண்ணையும் தாய்மொழியையும் மறக்காத அவர்களின் படைப்புகள் மென்மேலும் உற்சாகமடைந்து வருகின்றது. இளைஞர்கள் குழுக்களாகப் பிரிவடைந்து மலையக தோட்டங்களுக்கு சமுகமளித்து மக்களின் விழிப்புணர்வுகளைத் தூண்டும் வகையிலான தெருக்கூத்துக்களையும் மேடை நாடகங்களையும் நடத்தி மலையக சமூக அபிவிருத்திக்காக இளைஞர்கள் பாடுபடுகின்றனர். இலக்கிய நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் இலக்கிய வரலாற்று அறிவுகளை விருத்தி செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக சமூகம் ஏனைய சமூகங்களிலும் வேறுபட்டதன்மையை கொண்டது. என்னவென்றால் மாணவர்களின் கல்விச் சூழல்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், அடிப்படையான சூழ்நிலையிலுள்ள படித்தெழுந்த மாணவர்களின் வேலையில்லாத் தன்மைகள், பெற்றோரின் கவனக் குறைவுகளினால் பிள்ளைகள் வேலைக்கு அமர்த்தும் அபாயம் போன்ற பல இன்னல்களை மலையக சமுதாயம் எதிர்நோக்கி வருகிறது. இவ்வாறான பிரச்சனைகளை தீர்த்து மலையக சமூகத்தை அபிவிருத்தியடையச் செய்யும் முகமாக இளைஞர்கள் ஒன்றியமாக இணைந்து சங்கங்கள் அமைத்து அரசின் உதவியுடன் மலையக வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் கல்விக்காக ஏங்கும் மாணவ சமுதாயங்களை கல்வியை வழங்க வசதிகள் செய்தல், பிள்ளைகளை வேலைக் கமர்த்தி சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து அனைத்து சிறார்களையும் மீட்டு கல்வியில் நாட்டம் கொள்ளச்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். சுகாதார வசதிகள் குறைந்த நிலையில் இருக்கும் மலையக மக்களிற்கு சுகாதார சேவைகளை அரசின் உதவியுடன் வழங்குதல் ஆகிய சேவைகளைசெய்ய வேண்டும் ,மேலும் சில இளைஞர்கள் கல்வியில் நாட்டம் செலுத்தி வைத்தியர்கள் ஆசிரியர்கள் சுகாதார சேவையாளர்கள் காவல்துறை அதிகாரிகள், கல்வி நிபுணர்கள் தீயனைக்கும் படைவீரர்கள்போன்ற மேலும் பல துறைகளிள் முன்னேற்ற மடைந்து மலையக சமூகத்தின் அபிவிருத்திக்கு பெரும் பங்கு வகிக்கின்றனர்.

அரசியல் வாக்குரிமைகளை முற்காலத்தில் வாக்காளர் அட்டையை கொடுத்தார்கள் நாம் வாக்களித்தோம் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் இன்றைய இளைஞர்கள் அரசியல் என்ற ஒரு விழிப்புணர்ச்சியைத் கொண்டுள்ளார்கள். வாக்களித்தோம் வேலை முடிந்தது என்று எண்ணாமல் அரசியல் வாதிகளை நம் மக்களுக்காக நாம் தெரிவு செய்தோம். எங்களை வழிநடத்துவதற்காக தெரிவு செய்தோம் என்று தெளிவடைந்துள்ளனர்.

எமது நாட்டில் அன்றாடம் நிகழ்ந்து வரும் அரசியல் மாற்றங்களின் காரணமாக எமது நாட்டின் வருமானத்தில் பெரும் பங்கு வகிக்கும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் மலையக மக்களின் அன்றாட வாழ்வாதார சூழல் பெரிதும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாரான நிலைகளைத் தீர்க்கும்முகமாக எமது மலையக இளைஞர்கள் அரசியலில் நாட்டம் வைத்து மலையக சமூக கலாச்சார அபிவிருத்திக்காக பல வகைகளில் உதவிசெய்து வருகின்றனர்.

பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் மாத்திரம் எம்முன்னோர்கள் நாட்டம் செலுத்தினார்கள் ஆனால் தற்போதய இளைஞர்கள் விவசாயம், கைத்தொழில் வியாபாரம் போன்ற துறைகளில் ஈடுபட்டு சமூகத்தில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர் விவசாயத்திற்குரிய காணிகளில் பல உணவுப்பயிர்களையும் வாசனைத்திரவியங்களையும் மேலும் பல பயிர்களையும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்கின்றனர். இவ்வாறான வருமான அடிப்படையில் மலையக சமூகத்துக்கு பெரும் உதவிகளை வழங்குவதில் இளைஞர்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்னர். மேலும் வியாபாரத்திலும் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டும் முயற்சியிலும் இதன் காரணமாக மலையக பொருளதாரத்தில் அபிவிருத்தி உண்டாகி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இன்றைய இளைஞர் சமுதாயமே நாளைய இலங்கை" என்ற வகையில் முன்னேரிச்செல்லும் இந்நவீன உலக நவீன இளைஞர்கள் சமுதாயத்திற்கு தேவையான பல மாறுபட்ட சிந்தனைகளுடன் செயற்படுகின்றனர். எதிர்கால இளைஞர்களும் " தாழ்ந்து நிற்பதே தலை எழுத்தாக்கி சேர்ந்து நிற்கும் துயரில் தோய்ந்த தியாக வடிவங்கள் என்பதைச் போல வாழாமல் தாய்மண்ணுக்கும் பெருமைத் தேடித் தருவோம் என முன்னின்று எதிர்கால இலங்கையை காப்பார்கள். என்பதில் ஐயமில்லை.**

**சு.மதிஉமாகாந்தி**
**தரம் 11**
**புளியாவத்தை த.ம.வி**
**டிக்கோயா.**

---

## <u>மலரும் மங்கையும்</u>

மலரே உனக்கு வாழ்வு
மண்ணில் ஓர் நாள்
மங்கையர் பலருக்கு வாழ்வு
மண்ணில் பல நாள்
மலரும்,மங்கையும் ஒன்றென்பர்
அதனாலோ,மலரைப்போல்
கசக்கி மண்ணில் எரிந்தனர்
மங்கையரை?
சீதனம் என்னும் அரக்கன் சிதைக்கிறான்
மங்கையர் வாழ்வை
மலரே உன்னிடம் சீதனம் கண்டா
ஆதவன் உன்னை அழகாய்
மலரவைத்தான்
மலரே உன்நிறம் பல ஆயினும்
நீ மலரென்னும் ஓர் ஜாதியே
மனிதரில் மட்டும் ஜாதிகள் ஏனோ
மலரே உன்னைப்போல் மலரும் - வாழ்வு
மங்கையர் பலருக்கு பூமியில் இல்லை
இனியாவது உன் போல் மலருமா
மனித மணங்கள்.

செல்வி. பிரியதர்சினி
2ம் வருடம்
முகாமைத்துவ நிதிப்பீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

SUBASS TEX

NO: 12,Shoping Complex,
Bandarawela.
TEL: 057-22197.

BEST WISHES FROM:-

JANALANKA TEXTILE



No:29,MAIN STREET,
BANDARAWELA.



TEL: 057-2222786,
057-2222809.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WITH BEST COMPLIMENTS FROM:**

# ST. MARYS TRADERS



No: 50 Post Office Road,
Maskeliya



**General Marchants Wholesale**
**& Retail Estate Suppliers**
**Transporters and travels**

Tp: 052-2277020
052-2277316

---




AT

# KANSAI TRADING CO.

(A. T. PACK)

**IMPORTERS & EXPORTERS**
General Merchants & Commission Agents
Manufacturers of
H.D.P.E. FILM & BAGS, C.B.E. BULBS AGENTS


*Office:*
No.P.3,
Colombo Super Market Complex,
Colombo-11.
Tel:- 2434016

*Factory:*
62/26,27,
Sri Kalyani Gangarama Mw,
Colombo-15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

# ARUN TAILORS



For Expert Quality Readymade
Ladies&Gents Tailors


**NO:24 Shopping Complex,**
**Haputale.**
**Tel:057-68100.**



BEST WISHES FROM:-

# S.S.N.TRANSPORT SERVICE

**NO-122,NEGOMBO ROAD,**
**PELIYAGODA.**



**T.P, 0777-558027**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைந்திருக்கும் மலையக மாணவ புதையலையும்,
நாளைய பொன்னான சமூதாயத்தையும் உருவாக்கும்
உங்கள் பணிக்கு வாழ்த்து கூறும்

# MITTA PHOTO COPIES

**Dealers for Stationery, School Books, Electronic Items,**
**Kitchen Items, Fancy Goods, Cosmetics, Laminating & Binding**

No.9, Central Market,
Nuwara Eliya
Tel:- 052-2234697

மலையக மாணவ வளத்தை வளமாக்க
உதவும் உங்களது அர்ப்பணிப்பு சேவை
மென்மேலும் சிறப்புற வாழ்த்தும்



# PUSHPALINGAM

BD/Tamil Central College
Old Student(94 A/L)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

# K.SELVADURAI & CO

39,4Th Cross Street,
COLOMBO-11
T,Grams Katpagam
T.P-2338471
2328004

*WITH BEST COMPLIMENTS FROM:*

ASP

# A.S. P. SIVAN PILLAI

Imports, General Merchants & Commission Agents

Tel: 2421693

Fax: 2323461

214, Keyzer Street,
Colombo-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS FROM:*

## SIRI MAIJURA BAKERS AND HOTEL



NO: 1032,
MARADANA ROAD,
BORALLA
TEL: 2665289

---

*WITH BEST COMPLIMENTS FROM:*

# NUSHKIYA IMPEX

**General Merchants & Commission Agents**

161, Maliban Street,
Colombo-11


Tel: 011-2393464
0777-878105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


With best compliments from:

# New Communication

*Internet Café*



No. 36, Ramanathan Complex,
Park Road, Nuwara Eliya.
(Above the Commercial Bank)
Tel: 052-2223237, 2223390
052-2235876, 2223072,
E-Mail:- dineshk81@sltnet.lk



---

With best compliments from:

# **Singer** show Room

உங்கள் வீட்டுக்குத் தேவையான தொலைகாட்சி பெட்டி, வானொலிப்பெட்டி,
குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் அனைத்தையும்
தவனைமுறையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

**No. 80, Kandy Road,**
**Nuwara Eliya**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# SHANIKA

## Communication & Book centre

Dealers in Baby items & Gift Items



No.29,31, Main Street,
Rattota.

BRANCH:
P.M.BROTHERS
31, MAIN STREET,
RATTOTA.

Tel: 066-2255399
066-2255463
Fax: 066- 2255398

---

With best compliments
from:



## *Mr.Mrs. Nadarajah & Family*

*Mellayolla Road,*
*Rattota.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை தேடி

சிரிக்க மட்டும் தெரிந்த
மனிதா-எம்
மக்களின் வாழ்வை
சந்தித்து பார்த்தாயா?
முட்களின் பாதையில்
நித்தம் நடந்து
வறுமையில் துடிக்கும்-எம்
மாந்தரின் துயரை
சற்றேனும் எட்டிப்பார்த்தாயா?
மார்கழி மழையின்
குளிரில் நடுங்கி
கொழுந்த கூடை சுமந்து
வெடிப்பான பாதங்களுடன்
நிதமும் உழைக்கும்-எம்
மலையகத் தாய்களை
வெறுப்புடன் பார்த்து
எனடா ஏளனம் செய்கின்றாய்!
உன் பட்டங்களும் பதவிகளும்
அவர்கள் சிந்திய கண்ணீரும்
உதிரமும் தான் என்பதை
மறந்து போகாதே!
குாலம்காலமாய்- எம்மினத்தின்
வசந்தங்கள்
கவலைப் பொழுதுகளாகவே
அஸ்த்தமித்து போகின்றது!
இதய ரணங்களால்
கலங்கப்பட்ட வாழ்கை
தழும்புகள் எல்லாம்
எம் இதயத்தை
கல்லாக்கி விட்டன
பரம்பரை பரம்பரையாய்- உழைத்து
ஊதியம் இழந்து- உணர்வை
தளரவிடும் மக்கள்தான்- எம் மக்கள்
உயிரின் உன்னதத்தை உணராது
இதயத்தில் பலமிருந்தும்
பயங்கள் மறையாதும்
கண்ணீர் வடிக்கும்- எம்
மலையகத்தோரை சற்றேனும்
சிந்தித்துப் பாரடா!
நன்றி மறக்காமல்
இருக்கும் மக்களுக்கு நன்மையை
நல்குவார்களா?
சிந்தித்துப்பார் தமிழா!-
உன் ஒவ்வொரு வியர்வை துளிகளும்
புன்னகை ஆழியை உற்பத்தி செய்யட்டும்
போராடு, என்றோ ஒருநாள்
விடுதலை கீதத்தை- உன்
செவிகள் சுவைபார்க்கும!

மு. ராஜஸ்ரீ
பது / சரஸ்வதி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போற்றத்தகு பெருந்தகை பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன்

அன்பால் அனைவரையும் அனைத்து அரிய பணிகள் பல புரிந்த பெருமைக்குரிய பெரியார்களுள் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களும் ஒருவராவார். இவர் தன் அன்பர்களைவிட்டு பிரிந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. இருந்த போதும் இவரின் நினைவுகள் எமது நாட்டில் மட்டுமன்றி கனடா,அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பேசப்படுவது மட்டுமன்றி ஒவ்வொரு ஆண்டிலும் இவருக்காக நினைவு அஞ்சலி கூட்டங்கள், கண்காட்சிகள் போன்றன நடாத்தப்படுகின்றன.

போராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் யாழ்பாணத்திலுள்ள வீமன்காமம் என்னும் கிராமத்தில் 1924 ஆண்டு மே மாதம் 8ம் திகதி பிறந்தார். தந்தை நிர்வகித்த வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையிலேயே ஆரம்ப கல்வியை கற்று பின்னர் தெள்ளிபளை தமிழ், ஆங்கில கல்லூரியில் இடைநிலை கல்வியினை பெற்றார். பல்கலைக்கழகம் புகுவதற்கு முன் உயர்கல்வியை பரி.யோவான் கல்லூரியிலும், இந்து கல்லூரியிலும் கற்றார். 1941ம் ஆண்டு கொழும்பு பல்கலைகழக மாணவராக தேர்ச்சிபெற்றார். தமிழ், ஆங்கிலம், இலத்தின் ஆகிய பாடங்களை கற்று லண்டன் இடைநிலை தேர்விலே தேறிய வித்தியானந்தன் அவர்கள் தன்னுடைய கலைமாமணி பட்டத்திற்கு தமிழை சிறப்பு பாடமாக தெரிந்தெடுத்து அதன் மூலம் இச்சமூகத்திற்கு பல்வேறுபட்ட தமிழ் பணியினை ஆற்றினார். ஆகவே பேராசிரியர் வித்தியானந்தன் தனிப்பட்ட ரீதியில் ஒரு ஸ்தாபனம் தனிநபர் அல்ல ஒரு பொது சொத்தே என்று கூறலாம். ஆகவேதான் எல்லோரும் இவர் மீது உரிமை பாராட்டுவர். "கலைமகிழ்நன்", "பிறையன்பன்" எனபன இவர் தேர்தெடுத்த புனைப்பெயர்களே தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் உரியவராக இருக்க விரும்பினார் என்பதனை உணர்த்துகின்றது.

பேராசிரியர்.வித்தியானந்தன் அவர்களின் இயல்புகளை வகுத்துக்கூறுவது எளிதன்று பல அம்சங்களையும் இவர் கொண்டிருந்தார். சிறந்த தமிழ் அறிஞர், சிறந்த ஆராய்ச்சியாளர், சிறந்த நிர்வாகி, சிறந்த கலையார்வனர். இவை அனைத்திற்கும் மேலாக இவர் ஒரு சிறந்த மனிதர்,பண்பாளர், சிறந்த நண்பர், தத்துவ ஞானி, வழிக்காட்டி என்று இவரை பல கோணங்களிலிருந்து நோக்க முடியும். தமிழ் நாட்டிலே முதன் முதலாக ஒரு தமிழ் பல்கலைகழகம் தஞ்சைப் பெருநகரிலே அமைத்த போது, அப்பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபைக்கு, ஈழத்திலிருந்து இப்பேரறிஞர் தெரிவுசெய்யப்பட்டார். இவ்வாறு இவர் காணப்பட்ட காரணம் மனித பண்பு என்ற நல்லொழுக்கமே ஆகும்.

இப்பேராசிரியரின் கல்விப்பணியையும் சமூக நோக்கையும் ஆராய்ந்து பார்ப்போமாகில் காலம்சென்ற இப்பேராசிரியர் அவர்கள் சுவாமி விபுலானந்தரின் அடிச்சுவட்டில் பல்கலைகழக தமிழ் துறையின் தலைவராக விளங்கி அரும் பணியாற்றியவர். தமிழ் விரிவுரையாளராக பணிப்புரிய ஆரம்பித்து பல்கலைகழக துணைவேந்தர் என்ற உயர் பதவியை வகித்து யாழ்பான பல்கலைகழகத்தின் மேம்பாட்டிற்கு இடையறாது உழைத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உயர் கல்வி நிலையம் என்ற அச்சாணிக்கொம்பில் உயர் பதவி வகித்தாலும் கற்பித்தல், ஆராய்ச்சி எனும் இரு பெரும் பல்கலைகழக கடமைகளுக்கு அப்பால் சென்று சமூகத்துடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

கடினமான இலக்கணச்சூத்திரங்கள், பழந்தமிழ் இலக்கியப் பகுதிகள் போன்றன இளவயது மாணவர்களுக்கு "வேப்பங்காயாய்க் கசப்பான" என்று சொல்வது மரபு பேராசிரியர் அவர்கள் இதை உணர்ந்தவராய் எப்போதுமே இன்முகத்துடன் நகைச்சுவை உணர்வு ததும்ப, மிகுந்த சுவாரசியத்துடன் இப்பாடப்பகுதிகளை கற்பிப்பார். அன்னாரது தமிழ் வகுப்புகளில் நூற்றுக்கணக்கானவர்கள் தமிழ் பயின்ற காலமது (1963-1966), எப்போதுமே அவரது விரிவுரைகளின்போது வகுப்பறைகள் நிரம்பி வழியும். இவ்வாறு அன்னாரின் கற்பித்தல் பாணியும், அணுகுமுறையும் தனிச்சிறப்பானது, அவருக்கே உரியது. பேராசிரியர் தமிழியலில் ஆர்வங் கொண்டவராய் ஆராய்ச்சி பணியில் தீவிரமாக ஈடுப்பட்டவர். அன்னாரின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுநூலான "தமிழ் சால்பு" இன்றும் கூட, ஆய்வாளரால் பெரிதும் போற்றப்படுவதுடன், தேடவும்படுகின்றது. தமிழியல் ஆய்வு மேம்பாட்டிற்கு அவரது உன்னத பங்களிப்பு பற்றித் தமிழறிஞர் குழாம், தனியான ஆய்வு ஒன்றை நிகழ்த்திட வேண்டும்.

யாழ்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்தியே தீர்வது எனக் கங்கணங்கட்டிச் செயற்பட்டவர் பேராசியரவர்கள். இவ்வகையில், தமிழர் தம் கலாசாரத்தைப் பேணி வளர்க்க அவர்களுக்குரிய உரிமையை நிலைநாட்ட அரும்பாடுபட்டு உழைத்தவர் அன்னார். பல்கலைகழகப் பேராசிரியர்கள் என்றாலே, தாம் பிறந்து வந்த சமூகத்தைக் கருத்திற் கொள்ளாது பல்கலைகழகமென்னும் உச்சாணிக் கோபுரத்தில் வாழ்பவர்கள் என்ற கருத்துண்டு. சமூகத்துடன் தம்மை இணைத்துக்கொள்ளாது "மேல்தட்டிலிருந்து" சமூகத்தை அவதானிப்பவர்களே கல்விமான்கள் என்ற அக்கால யதார்த்தத்தையும் கட்டுக்கோப்பையும் உடைத்தெரிந்து, சமூகத்தில் காலங்கலமாகப் போற்றப்பட்டு வந்த நாட்டுபுற இலக்கியம், நாடகம், கூத்து என்பவற்றின் மறுமலர்ச்சியையும் புணர்நிர்மாணத்தையும் பற்றி ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றியவர் பேராசிரியரவர்கள்.

"குற்றம் குறைகளில்லாத மனிதன் ஒருவனும்
இவ்வுலகில் இல்லை மற்றவர்களுக்கு உபதேசிப்பதை
விட உன்னுடைய குறைகளை நீக்கிக் கொள்வதில்
உனக்கு நீயே உபதேசித்துக் கொள்வதே உத்தமம்.

என டாக்டர் மு.வரதராசன் அழகாக எடுத்து கூறியமை பேராசிரியரின் பண்புகளிற்கு பொருந்தும் வகையில் உள்ளன. ஏனெனில் "அவருக்கு அவரே நிகர்" எனக்கூறலாம். இவர் பல்கலைக்கழகத்திலே கல்விபயிலும் மாணவர்களுள் வசதி குறைந்த மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கு வேண்டிய பண வசதியினை ஏற்படுத்தி கல்விபயிலும் வாய்ப்பினை ஏற்படுத்தியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மாணவர்களது பிரச்சினைகளை, நெருக்கடிகளையெல்லாம் செவிமடுத்துக் கேட்டு அவற்றிற்கான பரிகாரத்தினை நல்கி வந்த மாமனிதன் தனக்கு தீமை செய்தவர்கள் கூட, பின் ஒருகால் அவரிடம் உதவிகேட்டுச் சென்ற போது பரிவுடன் உதவி செய்தவர். அவரது மனித நேயப் பண்புதான் அவரை மாமனிதன் ஆக்கியது எனலாம். பேராசிரியர் தமிழ் தேசியம் பற்றிய அரசியற் சிந்தனைகளில் தமிழின உணர்வெழுச்சியுடன், தமிழ்த் தேசிய வாதத்தின் முதற்குரலாகப் பல்கலைகழகத்தில் விளங்கினார்.

1966 களில் தனிச்சிங்களச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து அவரது சிந்தனைகளில் தமிழ் தேசியம் பற்றிய கருத்துக்கள் இடம்பெரத் தொடங்கிவிட்டன. தமிழாராய்ச்சி மாநாட்டினை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதைத் தடுப்பதற்கு போடப்பட்ட தடைகள் அனைத்தையும் மீறி, அங்கு அதனை நடாத்துவதில் அவர் காட்டிய தீவிரம் அவரை ஒரு போராளியாக இனம்காட்டியது. இவர் அரசியலில் முதன்மைவகிப்பதனால் தமிழ் மக்களின் அரசியல் மனப்பாட்டில் முக்கிய இடம் பெற்றிருக்கிறார். " ஈழத் தமிழருக்கெனத் தேசியத் தன்மை கொண்ட ஒரு கலை இலக்கிய மரபை வெளிக் கொணர வேண்டுமென்ற ஆர்வமாகும்" என்பது பேராசிரியரின் கருத்தாகும். இந்தக் கருத்து நிலையோடு அவர் செயற்பட்டிருக்கிறார். என்பதை அவரை ஆய்வோர் அறிவர். இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன் இலக்கியம் சார்ந்த பல படைப்புகளை வெளிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் வித்தியானந்தன் கிராமங்கள்தோரும் நாட்டுப்புற பாமர மக்களால் ஆடப்பட்டு, பாடப்பட்டு வந்த நாட்டார் கூத்துக்களைக் கற்றறிந்தோர் மத்தியில் அறிமுகம் செய்ததோடு கொழும்பு, கண்டி, முதலிய பெரு நகரங்களிலும் அரங்கேற்றிப் பெருமை சேர்த்தார். இவர் மேடையேற்றிய " மனமே", "சிங்கபாகு" போன்ற நாடகங்கள் பெரும் வெற்றியையும், வரவேற்பினையும் பெற்றன. இவர் புதுப்புது உத்தி முறைகளையும் கையாண்டு மேடையேற்றி தமிழ்நாடக உலகுக்கு ஒரு புதிய பரிணாமத்தையேற்படுத்தினார்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்ற தாயுமானவர் கருத்தைத் தனது வாழ்வின் தாரக மந்திரமாக கொண்டு தமிழ் மொழியின் வளர்ச்சிற்கும், உயர்வுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்த பெருமகனார். இவ்வாறு, பெருமைக்குரியவராகவும் சமூகத்தொண்டரா கவும் பேராசிரியர் வித்தியானந்தன் கருதப்படுகிறார். எல்லாவகையிலும் பன்முக ஆளுமையைக் கொண்டு இவரின் சேவையையும், பங்களிப்பினையும் பாராட்ட வேண்டியது தமிழ் கூறும் நல்லுலகினது கடமையாகும். இவர் சமூகத்தில் பல நன்மைகளை புரிந்து பல அறிஞர்களையும் உருவாக்கியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளத் தரைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளக் தனையது உயர்வு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் தமிழ் பேசும் உலகில் தனியிடத்தைப் பெறுகின்றார். இவ்வுலக வாழ்வினின்றும் மறைந்தாலும், அவரது எண்ணங்களும், சிந்தனைகளும், பணிகளும், மனிதமாண்புகளும் எம்போன்றோர் நெஞ்சில் என்றும் நீங்கா நினைவுகளாக நிலைத்து நிற்கும். அவரது வாழ்க்கை பலரது வாழ்வு வளத்திற்கு வலுவூட்டிக் கொண்டேயிருக்கிறது. வித்தகர் வித்தியின் தமிழ்ப்பணியும், கல்விப்பணியும் எம்மவர் மத்தியில் என்றும் நித்தியம் பெறுவனவாகும்.

ஈன்ற தாய் தன்னிலும்மேல் எங்கள் தமிழன்னை ஆன்றதிறம் யாவும் அவளுரிமை சான்றோர், அடிபாவ வாழ்ந்தாள் அவளைநாம் போற்றல் கடமையாம் " வித்தி" கருத்து.

வாழ்க அவருடைய திருநாமம்
தரம் - 12 (கலைபிரிவு)
கோகிலா தேவி சண்முகவடிவேல்
மா/ இறத்தோட்டை இந்து ம.வி,
இறத்தோட்டை.

---

## வளாகத்தில் நம் நட்பு

சொல்லிப்புரிவதில்லை
சொல்லாமல் புரிவதுமில்லை
குட்டி மதிலில், உச்சி வெயில் பாராது
பொருள் இன்றியே
தொடரும் அரட்டைகள்
ஆரம்பம் எங்கு?
முடிவு எங்கு?
யாருக்கும் தெரிவதில்லை,
தேடிப்பார்க்கும் அவசியமும்
இருந்ததில்லை
இதில் மறந்ததும், மறைத்ததும்
எதுவுமில்லை.
சிரிப்புக்கு மட்டுமே
ஒன்றுகூடிய ஒரு சில நிமிட
சீண்டல்கள்
சீண்டலின் சீற்றத்தால்
சிதைந்துபோன சினேகங்கள் சில
புரிந்துக்கொண்டதால்
நெருங்கிவந்த நேசங்கள் சில
வந்து போவோரின் தெளிவற்ற பார்வையில்
வடிவமைக்கப்பட்ட உறவுகள் சில

"சில"துகள் "பல"தாக மாறினும்
உணர்ந்து கொண்டவர்களை
உறுப்பினராக கொண்ட
உயர்ந்த நட்பு
சலனங்கள் இன்றியே
சந்தோஷமாகத்தொடரும்
ஆயுள் முழுவதும்.

பா.நிர்மலா
இரண்டாம் வருடம்
முகாமைத்துவ நிதி
பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவே! நீ வருவாயா ?

மலையக மக்களின் அவல
நிலையா!
ஐயோ பாவம்
பரிதாபம் பார்ப்பது யாரோ?
எவரும் இல்லை
தன் ஊணையும் உடலையும்
விடிவுக்கு அர்ப்பணித்து
கிடைத்தது ஒன்றும் இல்லை
தம் பசி போக்க
ஒரு பிடி வாய்ச் சோற்றுக்கு
வழியில்லை
என்னவோ வறுமையினால்
தானே
வாழ்கை எனும் புத்தகத்தில்
வெறும் ஏடுகள் மட்டும் தானா
விடிவு எனும் சொல்லை நிரப்ப
சாதித்தது ஒன்றும் இல்லை
இலங்கையில் யுத்தம் நின்ற
போதிலும்
மலையக மக்களின் வாழ்வில்
வறுமையென்னும் யுத்தம்
நீங்கவில்லை
சமாதானம் கிட்டிய போதிலும்
வாழ்வில் விடிவு இன்னும் கிட்டவில்லை
காலங்கள் புரண்டோடினாலும்
வறுமை புரண்டோடுவது எக்காலம்
ஆயிர வசந்த காலங்கள் மலர்ந்தும்
இந்த வசந்த காலத்திலும்
வறுமை ஒழியவில்லை
வசந்த காலமும் இலையுதிர் காலமும்
மாறாது மலையக மக்களின் வாழ்வில்
விடிவை தேடி தேடி அழைந்தும்
இன்னும் கிடைக்கவில்லை.
சமாதானத்திற்காக எத்தனையோ
போர் சேவகர் இறந்தனர்
விடிவு என்னும் சமாதானத்திற்கு
வறுமை என்னும் ஆயுதத்தில் சிக்கி
இறக்க போவது எத்தனைப் போரோ
மாலையில் சூரியன் மறைந்து
காலையில் உதித்தெழுந்தால்
பொழுது விடிகிறது ஆனால்
வறுமை என்னும் பொரும் புயல் ஓய்ந்து
விடிவு பிறந்தால் அன்றே வாழ்வின்
ஒளிமயம் தோன்றும் - விடிவே !
உன்னை பல விழிகளில்
தேடுகிறது வருவாயா?

மா. டீக்ஷனா
பது / சரஸ்வதி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TELICA CELLUAR TRADING CO,(PVT) LTD.

UPCORT BRANCH (Hatton)

Branch:-

*NEW ARADANA AUDIO CENTER*

Phones Sales & Marketing

No.12 Main Street,
Up-cot

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes from.....


AJ

# Arthy Jewellers



அசல் 22 கரட் தரமான தங்க நகைகள்
புத்தம் புதிய டிசைன்களில்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள
தலவாக்கலையில் சிறந்த ஸ்தாபனம்

Tel: 052-2258425



No.20, Main Street,
Talawakelle.

Best wishes from.....

# MAHAWELI STEEL

Building Materials & Hardwares

No. 28, Side Street,
Hatton.

Tel : 051 2222997
Fax : 051 2223078


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

NEW PRABHA STORES

No. 19,7th Street,
Maskeliya.
Phone : 052 2277449

With best compliments from:

NEW LUCKE STORES

No. 20 , Side Street,
Hatton
Tel: 051 2222720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM:-

NAC 48

# NATIONAL AGENCY

Commission Agents For Importers & local Produce

No. 48, 4th Cross Street
Colombo 11.

Tel : 2440872 , 2320985 Fax: 2423937

BEST WISHES FROM:-

# U.S.A.TRADING COMPANY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

No: 68, 4th Cross Street,
COLOMBO-11.

T.Phone: 422250
348656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM:

ஆற்றலுடன் கூடிய
அறிவாற்றலைப் பெருக்கிக் கொள்வோம்



# BRIGHT
## ACADEMY

தரம் 6 முதல் 13 வரை அனைத்துப் பாடங்களுக்குமான
சிறந்த நிறுவனம்

No.50, Kovil Road,
Maskeliya

Tel:- 052-2277458




# SAROJINI STORES

No. 46, Post Office Road,
Maskeliya

TP: 052-2277400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WITH BEST COMPLIMENTS FROM:**

# HEWAVITARANA & SONS
## SPICE CANAL

**General Merchants & Commission Agents,**
**Dealers in Ceylon Produce**

No.153, Dam Street,
Colombo-12.

Tel:- 2432172

---

குறிஞ்சித்தளிர் சிறக்க வாழ்த்துக்கள் கோடி!



குறிஞ்சித் தளிர்
ஒரு சிகரமாய்.....
வளர்ந்து.......
புகழ் பரப்ப
வாழ்த்துக்கள்

**K.Suresh B.A. (Hons) Spe in Econ**
**WORK STUDY EXECUTIVE**
*TEL:- 0114-828000 Ext 134*

***TIMEX GARMENTS LTD,***
*NO.100 OLD NEGOMBO RD,*
*WATTALA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SOME IDIMOS FOR YOUR SUCCESSFUL LIFE

- The life that seems, so-fair is nothing.
  But a bubble blown up in the air.
- Naver put of till tomorrow that can be done today.
- Don't blow your own trumpet always.
- If wishes were Horses, beggars can ride.
- If is useless to offer bread to a Man who is dying of thirst.
- Jack of all trade is Master of none.
- A greate fortune in the Hands of a fool is a great misfor tune.
- An early bird catches the warms.
- Those who live in glass houses should not throw stones.
- Asking questions is easier them answering thin.
- The time which is Lost is lost for ever.
- Don't fish in troubled water.
- Where ingnorance is Bilss, it is folly to be wise.
- Time and tide wait for noman.

A.Kugarajh
2nd Year,
Faculty of Management & Finance

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருத்தமற்ற பிரிவு......**

நீ என்னை விட்டு போனதில்
வருத்தமில்லை - எனக்கு.
அது உனக்கு மட்டுமே பிரிவு
ஏனெனில் நீ என்
மனச்சிறையில் ஆயுள் தண்டனை கைதியாய்
என் மனம் வாழும் வரை
கூடவே இருப்பாய்

**கண்கள்**

என் கண்கள் உன்னைக்கான-காத்திருந்து
குருடாகிப் போனபின்
உன் கண்கள் என்னைக்கண்டு
கண்ணீர் சொரியும்
ஓர் நாள்.

செல்வி பிரியதர்சினி
2ம் வருடம்
முகாமைத்துவ நிதிப்பீடம்.

---

**விழியே நீ பேசாதிரு......**

விழியே உன் மொழியறிந்தால்
வழியின்றி விலகிவிடும் வாய்வார்த்தைகள்
விழியே நீ பேசாதிரு.

புரிபவர்களுக்கு மட்டுமே
புரியவைக்கும் புரியாத மொழி நீ
விழியே நீ பேசாதிரு.

வியக்கும் வினோதபார்வையும்
விலக்கிடும் கதைகள் நூறு
விழியே நீ பேசாதிரு.

உன் மொழியறிய நீ நடத்தும்
காவியமாகும் வரை
விழியே நீ பேசாதிரு.

உனக்கும் எனக்கும் மட்டுமே
சொந்தமான ஊடகம் நீ
விழியே நீ பேசாதிரு.

விருப்பம் என்பதும் இல்லை என்பதும்
விரும்பும் வகையில் கிடைக்கும் வரையில்
விழியே நீ பேசாதிரு.

A.பிரியா
1ம் வருடம்
முகாமைத்துவ நிதிப்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM:

# Saba Impex

IMPORTS, EXPORTERS, AGENTS & REPRESENATIVES

64-2/20, DAM STREET,
COLOMBO-12,
SRI LANKA.

TP: 325860,330093, 431390 FAX: 439603


E-mail:- solar@sltnet.lk


---

WITH BEST COMPLIMENTS FROM:

# MASKELIYA TIMBER WORKS

*T.Umakanthan*
*0722-555491*





Dealers in all kind of
Local & Imported Timber

No:73, Upcot Road,
Maskeliya.

Tel: 0777-432835

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சித்தளிர் வளர்ந்து மலையகம்
மாண்புற எனது நல்வாழ்த்துக்கள்

# MR.ASRAF ALI

"கற்கக் கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

இல. 28
நிக்கலோய வீதி
இறத்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

கலைகள் வளர்க்கும் தமிழ் பணி ஓங்குக

# M.Thangavel

Geethas Building,
No.63A, Stafford Rd,
Ragala Bazaar,
Halgranoya

Tel: 052-2265367
052-2229868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Best Wishes

# காயத்ரி அச்சகம்

- திருமண அழைப்பிதல்
- பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்
- பிறந்த நாள் அழைப்பிதழ்
- சகல விதமான அச்சு வேலைகளை குறைந்த விலையில் அழகான முறையில் நீங்கள் விரும்பியவாறு பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

இல. 50 , டன்பார் வீதி,
அட்டன்
தொ. பே - 051-22223848




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Well Wishes From :

## Faculty of Management & Finance- Final Year







J.P.Wesley

V.Ranesh

V. Ravitha

R.Punithawathy

V.Palani Kumar

C.Pradeepan

S.Udesh Edwin

R.Sivachandran

G.Salina Jeyamalar

P.Shoba

T.Puwanalogini

S.Udeshini

M.Rameshkumar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## என்றென்றும் நன்றியுடன்..............

அனைத்தும் சிறப்புற அமைய அருள்புரிந்த இறைவனுக்கும், பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கௌரவ. திரு.P. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த பேராசிரியர் திரு.சோ.சந்திரசேகரன் அவர்களுக்கும், மலருக்கு தமது ஆசிச்செய்தியினை வழங்கிய மதகுருமார்களுக்கும், மன்றத்தினை வழிநடத்தி, என்றும் எமக்குத் துணை நின்ற சங்கத்தின் காப்பாளர் முகாமைதுவ நிதிப்பீட விரிவுரையாளர் திரு.சசிதரன் அவர்களுக்கும் இடர்கள் எற்படும்போது துணைநின்று வழிநடத்திய விரிவுரையாளர் திருமதி. உஷா ஸ்ரீதரன் அவர்களுக்கும், மற்றும் விரிவுரையாளர்கள் திருமதி சேனாதிராஜா, திரு.ரமேஷ் அவர்களுக்கும் மன்றத்தின் அறிவிப்பை ஏற்று ஆக்கங்களை உரிய திகதியில் வழங்கிச்சிறப்பித்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் விளம்பரங்களைத்தந்து பொருளாதார ரீதியில் எம்மை ஊக்கப்படுத்திய விளம்பரதாரர்களுக்கும், நன்கொடை வழங்கிய கொடையாளர்களுக்கும், மலரை அழகுற ஆக்கித்தந்த பிரஸ்டிச் அச்சகத்தாருக்கும், மலர் சிறப்புற வடிவமைத்துதவிய முகாமைத்துவ நிதிப்பீட மாணவன் C.பிரதீபன் அவர்களுக்கும் மற்றும் மலர் சிறப்புற அமைய உதவிய எமது அனைத்து நல் உள்ளங்களுக்கும் மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.
நிர்வாகக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rail Tours



Masters in Tourism

Office: Fort Railway Station,
Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# Lanka Ashok Leyland Ltd.

Fully equipped workshop.
for maintenance, overhauling,
body building and accident repairs

Head Office & Factory:

Panagoda.
Homagama.
Tel: 011-2750232-3, 2571321, 2752320
Fax: 074-440091
E-Mail: lankaashokltd@sltnet.lk

Marketing Office:

No: 39 1/1, Edward Lane,
Colombo-03
Tel: 011-2502532, 2590404, 2592163, 074514561
Fax: 011-2502286
E-Mail: lal@sol.lk

Spare Part Outlets:

No.315, Sri Sangaraja Mw, Colombo-10
No. 227, Pahala Peakwella, Matara
No. 170, Sedawatte Road, Wellampitiya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org